அமிர்தவசனி

தெய்வீக மாதப் பத்திரிகை

—1—

18586

மலர்: 8 இதழ் 1 விலை அ. 4	துன்முகி௵ சித்திரை௴ ஏப்ரல்-மே—1956	வருட சந்தா ரூ. 2-4-0

18586



கனிந்த அருள் பெற்ற காரைக்காலம்மையார்
(பெரியபுராணச் சித்திர விளக்கம் 25; பக்கம் 41)

பொருளடக்கம்

2

பக்கம்

1. கடவுள் நட்பு (திருப்புகழ் மணி) ... 1
2. துன்முகி ... 4
3. அநுபூதியின் பயன் (கி. வா. ஜகந்நாதன்) ... 5
4. காசிமுனிவர் (ரசபதி) ... 10
5. அருணகிரியும் ஐம்பூதத் தலங்களும் (திருப்புகழ் சதுரர் சே. த. இராமலிங்கம் பிள்ளை B.A.B.T.,) 19
6. தாயும், சேயும் (திருமானந்தவாரி) ... 25
7. ஆப்பில் முளைத்த அண்ணல் (தணிகைமணி வ. சு. செங்கல்வராய பிள்ளை) ... 27
8. திருப்புகழ் (விநாயகர் துதி) (குகஸ்ரீ) ... 33
9. நாணமும் நகையும் (அன்பன்) ... 39
10. காரைக்காலம்மையார் (கி. வா. ஜ.) ... 41
11. Sri Nataraja at Tiruvalangadu (*Thiruppugal Mani*) ... 47

அமிர்தவசனி சந்தாதாரர்கட்கு வேண்டுகோள்

சித்திரை மீ" முதல் பங்குனி மீ" முடிய வருடச் சந்தா உள் நாட்டிற்கு இலங்கை உள்பட ரூ. 2—4—0. நான்கு வருடச் சந்தா ரூ. 8—4—0. அயல் நாடுகளுக்கு வருடச் சந்தா 4 ஷில்லிங்குகள். நான்கு வருடச் சந்தா 15 ஷில் லிங்குகள். போஸ்டல் ஆர்டராக அனுப்பவும்.

சித்திரை மாதத்திற்கு முன்னமேயே மன்மத ஆண்டிற்கு உரிய தங்கள் சந்தாத் தொகை 2—4—0ம் அனுப்பினால் தொடர்ந்து பத்திரிகை அனுப்பப் பெறும். வருஷத்தின் நடுவில் சந்தாச் செலுத்தினால், சித்திரைமீ" முதல் உள்ள முன் பகுதிகள் கைவசம் இருப்பதை உத்தேசித்து, சந்தா தாரர்களாகச் சேர்க்கவோ மறுக்கவோ நேரும். ஆகையால், ஆண்டு பிறப்பதன் முன் சந்தா செலுத்துவதே நலம்.

அமிர்தவசனி, 54, பந்தர் தெரு, சென்னை.

துன்முகி ஆண்டில் வாசகர்க்குப் பயன் விளைய
அமிர்தவசனி வாழ்த்துகிறது.

அமிர்தவசனி
தெய்விக மாதப்பத்திரிகை.

ஆசிரியர்: சு. முத்துஸ்வாமி

எல்லோரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே

மலர் 8	துன்முகி ௵ சித்திரை ௴ ஏப்ரல்—மே - 1956	இதழ் 1

கடவுள் நட்பு

(திருப்புகழ் மணி)

மஹா பாரதம் ராமாயணம் ஸ்காந்தம் எல்லா வற்றிலும் மிகவும் மேன்மையாக விளங்குவது கடவுளின் நட்பு. பாரதப் போர் ஆரம்பத்தில், பாண்டவர்கள் கண்ணனை தங்கள் பக்கம் வேண்டினார்கள். துரியோதனாதிகள் கண்ணன் சேனைகளை வேண்டினார்கள். அப்படியே அளித்தான். கண்ணன் இருந்தாலன்றி எந்த இடத்திலும் வெற்றி நிலை நிற்காது என்று அறிந்த பாண்டவர்கள் அவனையே வேண்டினார்கள். பாண்டவர்கள் வெற்றி அடைந்தார்கள். துரியோதனாதிகள் மடிந்தார்கள். சகோதரருக்குள் ஏற்பட்ட விரோதங்கள் இப்படி முடிந்தன.

ஸ்ரீ ராமாயணத்தில் சகோதர விரோதங்கள் எப்படி முடிந்ததென்பதைப் பார்ப்போம். ஸுக்ரீவனுக்கும் வாலிக்கும் போர். ஸுக்ரீவன் ஸ்ரீ ராமனைத் துணை

அப்பா பழனிமலை யாண்டவா உன்னருள்தான்
இப்பாரில் யாவரையும் ஏற்குமிது நிச்சயமே.

கொண்டான். தன்னிடத்தில் நட்பு பூண்ட ஸுக்ரீவனுக்கு ஸ்ரீ ராமர் உரைக்கின்றார்.

மற்றினி யுரைப்பதென்னே!
வானிடை மண்ணின் நின்னைச்
செற்றவர் என்னைச் செற்றார்!
தீயரே யெனினும் உன்னோடு
உற்றவர் எனக்கு முற்றார்,
உன்கிளை எனது, என் காதல்
சுற்றம் உன் சுற்றம், நீயே
இன்னுயிர்த் துணைவன் என்றான்.

குருநாதன் பண்பை விஸ்தரிக்கும் ஒரு பாட்டு—

"அழுந்தொறும் அணைக்கும் அன்னை!
அறிவிலாது ஓடியாடி
விழுந்தொறும் எடுக்கும் அப்பன்!
விளையாடும் பொழுது தோழன்!"
சொந்தமாய் எடுப்போர்க் கெல்லாம் குழந்தை!
இப்படி உலாவும் என் குருநாதன் வாழியே!
என்பர்.

ஆகவே தெய்வத்தை வணங்கித் தமது துணைவனாய்ப் பெற்று விட்டால், அதை விட மானிடனுக்கும் வேறு பேறு உண்டோ? இல்லை இல்லை.

இராமபிரான் ஸுக்ரீவனுக்குச் சொல்லியது போல்,கடவுள் தன்னுடன் நட்புப்பூண்டவர்க்கு உயிர்த் துணையாய் ஆவதும் அன்றி, அவர் தம் காதல் சுற்றமெல்லாம் தன் காதல் சுற்றமாய் கருதுகின்றாராம். நட்புப் பூண்ட பக்தன் விரோதிகளை, இறைவன் தனது விரோதிகளாய்க் கொள்கின்றாராம். சாதுக்கள் எல்லாம் இறைவன் நண்பர்கள். ஆகையால் சாதுக்களிடத்திலும் கடவுளிடத்திலும் பகைமை கொள்வது ஆகாது என்பர் பெரியோர்கள்.

வேலாயுதம் அன்று இருள்மலத்தை வீழ்த்ததுபோல்
காலாயுதம் வரினென் முன் கன்மவினை கட்டறுமே.

ஸ்காந்த புராணத்தில் தேவர்கள், நாட்டை இழந்து கடவுளிடம் முறையிட்டு, அன்பால் அவரே கதி யென்றும் உற்றனர். அசுரர்களை யெலாம் ஒழித்து, சூரபத்மாதிகளை வதம் செய்து தேவர்களை மறுபடியும் க்ஷேமத்தில் நிலைக்க வைத்தார். நட்புக்கு சிறந்த பொருள் நம்பனே யாகும். அவனை அடைந்தவர்க்குக் குறையில்லையாம். கண்ணன் கீதையில் சொல்லுவதும் ஆண்டவன் வாக்கே. ராமபிரான் ஸுக்ரீவனுக்குச் சொன்னதை கண்ணன் மிகவும் தெளிவாக விளக்கினர்.

உலகெலாம் உறையும் தெய்வீக தத்துவமாக நினைந்து, தன்னையே பஜித்து வரும் நித்ய யுக்தர்கள் எத்தொழிலில் வாழ்க்கையை நடத்தி வந்தாலும் தன்னுள் வசிப்பதாகவும், எந்த பக்தன் எல்லா கருமங்களையும் ஆண்டவன் ஆணையென்று நடத்தி அர்ப்பணம் செய்கின்றனோ, எல்லா ஜீவராசிகளையும் தன்னுயிர் போல் கருதி அன்பாய் நடத்துகிறனோ, அந்த பக்தன் தனக்கு மிக மிக ப்ரியமானவன் என்றும், அவன் யோக க்ஷேமத்தைத் தான் ஏற்று நடத்துவதாயும் சொன்னர். ஆகையால் எந்த வருஷமும் வந்தால் என்ன! போனலென்ன! ஆண்டவனையே துணையாய் நாடுவோ மெனின், குறைவொன்றும் வாராது. இதே தத்துவம் வேல் வகுப்பில் சொல்லப்படுகிறது.

"சொலற்கரிய திருப்புகழை உரைப்பவரை
அடுத்த பகை உருக்கி யெழும் அறத்தை
நிலைகாணும்"
"துதிக்கு மடியவர்க் கொருவர் கெடுக்க
இடர் நினைக்கின் அவர் குலத்தை முதல்
அறக்களையும் எனக்கோர் துணை யாகும்"

எது என்றல்,

"திருத்தணியில் உதித்தருளும் ஒருத்தன்
மலை விருத்தன் என துளத்திலுறை

பட்டதெல்லாம் போதும் பழனிமலைக் கோவேஎன்
கட்டமெல்லாம் தீரக் கடைக்கணிப்ப தென்றேயோ.

கருத்தன் மயில் நடத்து குகன்வேலே"
"சினத்தவர் முடிக்கும்"

எனும் திருப்புகழில் சொல்லப்பட்ட தெய்வீகப் பண்பும் இதுவே. இவ்விதமாய் விளங்கும் இறைவன் பண்பையே நாடி உலகம் அமைதி யடையவே பிராத் திப்போம்!

சாந்தி சாந்தி சாந்தி

துன்முகி

மன்மத வருஷம் முடிந்து துன்முகி வருஷத்திற்கு வந்து விட்டோம். ஸ்ருஷ்டி எனும் தேசத்தில் காலம் என்ற ராஜபாதையில் அளவற்ற நிலையங்கள் இருக் கின்றன. கடந்து செல்கின்றோம். வருஷம் என்ற நிலையங்கள் அநேகம் தாண்டி இப்போது துன்முகி எனும் நிலையத்திற்கு வந்திருக்கின்றோம். மேன் மக்கள் உபதேசித்தவாறு காலத்தை கடத்த வேண்டும். காலம் ஒன்றுதான்; ஆனால் மூவகைத்து. ஞானிகளைப் பற்றிப் பாரதியார் சொல்லியதை ஞாபகப் படுத்திக் கொள்ளல் வேண்டும்.

"நானெனும் ஆணவம் தள்ளலும்—இந்த
ஞாலத்தைத் தானெனக் கொள்ளலும்
மோன நிலையில் நடத்தலும்—ஒரு
மூவகைக் காலம் கடத்தலும்
நடுவான கர்மங்கள் செய்தலும்—உயிர்
யாவிற்கும் நல்லருள் செய்தலும்
பிறர் ஊனினை சிதைத்திடும் போதிலும்
தமதுள்ள மருளின் நெகுதலும்"

ஆயிரங்கால முயற்சியால் பெறுவர் இப்பேறுகளை ஞானிகள். நன்முயற்சியை வேண்டி புதிது புதிதாகவே ஓடும் காலம், புதிதாக புதிதாக வீடும் பொருளும் குணமும் பண்பும் ஈயும். காலமே கடவுள் அல்லவோ. முருகனும் வேலைக்காரன் ஆச்சுதே. பக்தியில் முதிர்ந்த ஞானிகளாய் உலகம் மேன்மேலும் விளங்குக. ஈசன் அருள் புரிவாராக.

வாட்டுமலம் ஊட்டுவினை தன்னால் வருந்தெற்குக்
காட்டியருள் நீழல் கரைசேர்ப்ப தென்றேயோ.

5

அநுபூதியின் பயன்

(கி. வா. ஜகந்நாதன்.)

கந்தர் அநுபூதி என்ற திரு மாளிகைக்குள்ளே இனிப் புகலாம். கந்தர் அநுபூதி சொல்லாலேயே கட்டின ஒரு கோயிலுக்குச் சமானமானது. அருணகிரிநாதப் பெருமான் அற்புதமான தம் வாக்கு வன்மையாலே அந்தக் கோயிலைக் கட்டியிருக்கிறார். பெரிய கோயிலுக்குள்ளே போகும்போது நாம் முதலில் எதைப் பார்க்கிறோம்? விநாயகப் பெருமானைக் காணலாம். சைவர்கள் எந்த நூலை ஆரம்பித்தாலும் முதலில் விநாயகப் பெருமானைத் துதிப்பது வழக்கம். எந்தக் காரியத்தைத் தொடங்கினாலும் சரி, விநாயகர் வணக்கத்தைக் கூறிக்கொண்டே தொடங்குவார்கள். அருணகிரிநாதப் பெருமான் கந்தர் அநுபூதி என்ற கோயிலுக்குள்ளே நம்மை அழைத்துச் செல்லுகிறார். செல்லும் பொழுது முதலில் கணபதியைக் காண்கிறார். துவார கணபதி என்று சொல்வார்கள், வாயிலில் இருக்கும் விநாயகப் பெருமானை. அந்தப் பெருமானுக்கு ஒரு வணக்கம் போடுகிறார். 'நான் கந்தர் அநுபூதி ஆகிய நூலைச் செய்ய ஆரம்பிக்கிறேன். இதற்கு விநாயகருடைய திருவருள் வேண்டும்' என்ற கருத்தோடு அவர் பாடுகிறார்.

கந்தர் அநுபூதி என்ற நூல் என்று அவர் சொல்லவில்லை. "முருகப் பெருமானுக்கு அழகான ஒரு மாலை சாத்த வேண்டும். அந்த மாலை நன்றாக இருக்கும்படியும், அதைச் சாத்துவதற்குள்ள தகுதி எனக்கு உண்டாகும்படியும் விநாயகப் பெருமான் அருள் செய்ய வேண்டும்" என்று பிரார்த்திக்கிறார். அந்தப் பிரார்த்தனையிலே மாலை சூட்டுவதனாலே என்ன பயன் என்பதையும் கூறுகின்றார். அந்தப் பயனைத் தான் முதலில் பாடுகின்றார்.

**குன்றை எறிந்த குமரேசா என் துன்பக்
குன்றைத் துளைத்தெறியக் கூடாதோ கோவே.**

இந்தக் காலத்தில் எந்தக் காரியத்தைச் செய்தாலும், "என்ன பிரயோசனம்?' என்று கேட்கிறார்கள். "பயனில்லாத காரியத்தைச் செய்யக் கூடாது; பயன் இருந்தால்தான் ஒரு காரியத்திலே ஈடுபடவேண்டும்" என்றெல்லாம் வற்புறுத்திப் பேசும் மக்கள் இந்தக் காலத்தில் இருக்கிறார்கள். எந்தக் காலத்திலுமே பயன் இல்லாத செயலைச் செய்வது அவ்வளவு நல்லது அன்று. நம்முடைய வாழ்நாள் வீண் போகாமல் இருக்க வேண்டுமானால், செய்கின்ற காரியங்கள் அனைத்தும் பயன் உள்ளவையாக இருப்பதுதான் நல்லது. பேசினாலும் சரி, நினைத்தாலும் சரி, செயல் செய்தாலும் சரி, எல்லாவற்றிலும் நல்ல பயன் இருக்க வேண்டும். பயனில் உயர்வு, தாழ்வு, மத்திமம் ஆகிய மூன்று விதமான பயன்கள் உண்டு. மிகமிகச் சிறந்த உத்தமமான பயன் கிடைக்கும்படியாக ஒருவன் ஒரு காரியம் செய்தால், அவன் உத்தமனாக வாழலாம்.

கந்தர் அநுபூதி என்ற மாலையை என்ன பயன் கருதி, அருணகிரிநாதர் பாடுகிறார்? அதை அவரே சொல்லுகிறார்; கேட்கலாம்.

"நெஞ்சக் கன கல்லும் நெகிழ்ந்துருக"

கந்தர் அநுபூதி பாடுவதற்குப் பயன் நெஞ்சம் உருகுவது என்று சொல்கிறார். நெஞ்சம் உருகுவதாகிய பயனுக்குக் கந்தர் அநுபூதியாகிய அழகான நூல் நமக்கு வழி காட்டுகிறது. அதை அவர் எப்படிச் சொல்லுகிறார்?

"நெஞ்சக் கனகல்லும் நெகிழ்ந்துருகத்
தஞ்சத்து அருள்சண் முகனுக்கு இயல்சேர்
செஞ்சொற் புனைமாலை சிறந்து இடவே
பஞ்சக்கர யானை பதம் பணிவாம்"

என்று முதற் பாட்டைப் பாடுகிறார்.

இது கணபதி காப்பு. கந்தர் அநுபூதி என்ற நூலைப் பாடத் தொடங்கும்போது 'இந்த நூல் நன்கு நிறைவேற

அன்னை யுனக்களித்த அயில்வேலை ஏந்துவது
என்னை யினிதளிக்க அன்றோ இறையோனே.

வேண்டும்' என்ற நினைவோடு பாடின விநாயகர் வணக்கம் இது!

உயிர்கள் எல்லாம் உடம்பு என்னும் சிறைக்குள்பட்டு வாடுகின்றன. அந்தச் சிறையிலிருந்து விடுபடாமல் மற்றொரு சிறைக்கு மாறுகின்றன. இந்தச் சிறை மாற்றந் தான் மரணம். இந்தச் சிறைக்குள்ளே புகுவதுதான் ஜனனம். பிறப்பு, இறப்பு ஆகிய இரண்டும் உயிர்களுக்கு வாய்த்த பெரிய நோய்கள். மரணப்பிணி, பிறவிப்பிணி என்று சொல்வார்கள். பிறவிப்பிணியும் மரணப்பிணியும் போக வேண்டுமானால் ஆண்டவனுடைய திருவருள் வேண்டும். இந்த இரண்டு பிணியும் நமக்கு வருவதற்குக் காரணம் என்ன? அதைப் பற்றிச் சாஸ்திரங்கள் எல்லாம் பேசுகின்றன.

நாம் பிறவியாகிய பெருங்கடலில் புகுந்திருக்கிறோம்.

"தனியனேன் பெரும்பிறவிப் பௌவத்து எவ்வத்
தடந்திரையால் எற்றுண்டு"

என்று மணிவாசகப் பெருமான் பாடுகின்றார். கரையில்லாமல் இருப்பது கடல். அதுபோல அளவு இல்லாமல், எப்பொழுது முடியும் என்ற வரையறை இல்லாமல் மேலும் மேலும் வருகிற பிறவிகளிலே இன்பத் துன்ப அலைகளில் பட்டுத் தடுமாறுகிறது உயிர். அந்தக் கடலினின்றும் கரையேற வேண்டுமானால் அதற்குச் சில முயற்சிகள் வேண்டும்.

அந்தக் கடலிலே நாம் விழுந்து தவிக்கின்றோம். தவிப்பது மாத்திரம் அல்ல; ஆழ்கிறோம். கடலிலே மிதக்கின்ற ஒருவனுக்கு யாரேனும் தோணி கொண்டு வந்தால் ஏறிக் கொள்கின்ற வாய்ப்பு உண்டு. ஒரு மரக்கட்டை கிடைத்தாலும் பற்றிக் கொள்ளலாம். நெடுநேரம் நீந்திக் கொண்டிருக்க முடியாது. கையும் காலும் இளைத்துவிடும். பற்றிக் கொள்வதற்கு ஏதேனும் கிடைக்குமானால் ஒருவாறு கடலின் மேலே மிதந்து கொண்டிருக்கலாம். பின்பு,

---

ஆதியந்தம் இல்லா அரும்பொருளே ஏழையெனைச்
சோதித்தால் தாங்குவனோ சொல்லாய் பரஞ்சுடரே.

யாரேனும் கருணை உடையவர்கள் தோணியைக் கொண்டு வந்தாலும், கப்பலைக் கொண்டு வந்தாலும், பிற கலங்களைக் கொண்டு வந்தாலும் அவைகளைப் பற்றிக் கொண்டு நாம் மெல்லக் கரையேறி விடலாம்.

நாம் இருக்கிற நிலையோ அதற்கு மாறுபாடாக இருக்கிறது. ஒருவன் கல்லைக் கட்டிக்கொண்டு கடலில் விழுகிறான் என்று வைத்துக் கொள்வோம். அப்பொழுது அவன் கடலின் மேலே மிதக்க முடியாது; நீந்தவும் முடியாது. எவ்வளவுதான் கைக்குப் பலம் இருந்தாலும் கூட அவன் கட்டிக் கொண்டிருக்கும் கல்லானது கீழே இழுக்கும். மேலே மிதக்கிற வரைக்கும் அவனுக்கு நம்பிக்கை உண்டு. எப்போதாவது ஏதாவது ஓடம் வரும் என்று எதிர்பார்த்திருக்கலாம். ஆனால் கடலுக்குள்ளே ஆழ்ந்து போனால், அவன் உய்வதற்கு வசதியே கிடையாது. அப்படித்தான் ஆருயிர்கள் பிறவியாகிய பெருங்கடலில் அழுந்திக் கொண்டிருக்கின்றன. அவ்வுயிர்களோடு கட்டிவிடப் பட்ட கல் எது? அதுதான் நெஞ்சம் என்ற கல். அது கனத்த கல். அருணகிரிநாதர் அதை,

"நெஞ்சக் கனகல்"

என்று சொல்கிறார். அந்தக் கல் உயிரோடு ஒட்டிக் கொண்டிருக்கிறது. உயிர் உடம்பை எடுக்கும்போதே மனமும் கூட வருகிறது. உடம்பு இல்லாத போதும் மனம் இருக்கிறது. இந்தப் பருவுடலினின்றும் உயிரானது வெளியேறி விட்டால் மரணம் என்று சொல்லுகிறோம். அந்தக் காலத்தில் அந்த உடம்பு இல்லாவிட்டாலும்கூட, நுண்ணுடம்பும் மனமும் இருக்கின்றன. மனத்தை விட்டு விடுதலை பெற்ற உயிர் ஞானம் பெற்று முத்தி அடையும்.

மனம் என்னும் கல்லானது பிறவி என்னும் கடலில் உயிரை ஆழ்த்திக் கொண்டேயிருக்கின்றது. அந்த மனத்தைத் தனியே தகர்த்துவிட முடியாது; பொடி பண்ணிவிட முடியாது; ஆனாலும் அது போனால்தான் கீழே ஆழ்கின்ற

உந்தனருள் இன்றேல் உய்வதுதான் எங்ஙனமோ
அந்தணர்தம் வாழ்வே அருளாய் அருளாயே.

உயிர் கடலின் மேலே வந்து மிதக்கலாம். மிதந்தால்தான் ஆண்டவனுடைய பாதார விந்தமாகிய புணையிலே ஏறிக் கொள்ளலாம்.

''பிறவிப் பெருங் கடல் நீந்துவர்; நீந்தார்
இறைவன் அடி சேராதார்''

என்று திருக்குறள் சொல்கிறது. இறைவனுடைய அடியாகிய தெப்பக் கட்டையைப் பற்றிக் கொள்ளவேண்டும். பிறவிப் பெருங் கடலின் மேலே மிதக்கிறவர்கள் பற்றிக் கொள்ளலாம். மனமாகிய கல்லை மாய்த்து விட்டவர்கள், அதனின்றும் விடுதலை பெற்றவர்கள், இறைவனுடைய அடியைப் பற்றிக் கொள்ளலாம். ஆனால் மனம் என்னும் கனத்தக் கல்லைக் கட்டிக் கொண்டு விழுந்தவர்களுக்கு மேலே மிதப்பதற்கு வழியில்லை. ஆகவே, முதற் காரியம், நெஞ்சமாகிய கனகல்லை நாம் அழித்து விடவேண்டும். அதை எப்படி அழிப்பது? அதுதான் பெரிய சங்கடம்.

நெஞ்சம் உடையாது; அதனைத் தனியே அறுத்துவிட முடியாது, உடம்போடு ஒட்டிக் கொண்டு வருகின்ற கட்டியைப் போலப் பிறக்கின்ற உயிர்களுடன் வருகிறது நெஞ்சம். அதனை உருக்கி விடலாம். உருக்கி நீராய் ஆக்கி விட்டால் கடலோடு கலந்துவிடும். அப்புறம் மேலே மிதக்கலாம். அந்த நெஞ்ச உருக்கம் என்ற ஒன்று கிடைத்து விட்டால் பிறவியாகிய துன்பத்தினின்றும் நீங்குவதற்கு வழி உண்டாகும். ஆகவே, நெஞ்சமாகிய கனத்த கல்லை உருக்குவது இன்றியமையாத காரியம். மற்றவை எல்லாம் அதனைத் தொடர்ந்து வந்து சேரும். மிக வேகமாக ஓடுகின்ற ஆற்றிலே ஒரு பொருளைப் போட்டால் அது நிச்சயமாகக் கடைசியிலே கடலில் போய் சேரும். அது போல நெஞ்சம் என்னும் கல் உருகியது என்ற ஒன்று ஆரம்பம் ஆகிவிட்டால் அதற்கு அப்பால் நெஞ்சம் அழிந்து போகும்; பாசத்தின் கட்டுத் தளரும். இறைவனுடைய

நின்னடிமை நானலவோ நீதிதரு ஞானதரா
உன்னடிமை மோனங்கொண் டுணர்தல் உணராயோ

பாதமாகிய புணையை நாம் பற்றிக் கொள்ளலாம். பிறவி என்னும் பெருங் கடலினின்றும் கரையேறலாம். எல்லா வற்றிற்கும் முதற் காரியமாக நெஞ்சம் என்னும் கனத்த கல் உருகவேண்டும். அந்தப் பெரிய பயனைக் கந்தர் அநுபூதி விளைவிக்க வேண்டும் என்று ஆசைப் படுகின்றார் அருண கிரிநாதர்.

"நெஞ்சக் கனகல்லு நெகிழ்ந்து உருகும்படியாக நான் இந்தப் பாட்டைப் பாடுகிறேன்" என்று தொடங்கு கிறார்.

கந்தனுடைய திருவருளினாலே பெற்ற அநுபவத்தைச் சொல்ல வந்த அருணகிரிநாதர், அந்த அநுபவத்தின் முதல்படி, நெஞ்சம் என்னும் கல் உருகுவது என்பதையும் இதில் குறிப்பிக்கின்றார். கந்தனைப் பற்றிப் பின்னாலே சொல்லப் போகிறார்; அதற்கு முன் பயனை முன் கூட்டிச் சொன்னார்.

"நெஞ்சக் கனகல்லும் நெகிழ்ந்துருக
மாலே சிறந்து இடவே" (தொடரும்.)

★

முருகனடியார் 13

காசிமுனிவர்

(ரசபதி.)

புகழ் மிகுந்தது பொதிய மலை. அம் மலையி லிருந்து ஊற்றுப் பெருக்கெடுத்து ஓடி வருகிறது தாம்பிர பரணி. அதனால், பல வளம் நிறைந்தது பாண்டி நாடு.

வாழ்நாள் முடிகிறதே! வருத்தும் இயமன் வருவானே என்று அஞ்சாதே நெஞ்சே! செம்மேனியாளன்; பொல்லாத யானையாகி, உருத்து எதிர்த்த அசுரன் தோலை உரித்தவன். மண்ணில் திண்மையன். நீரில் சுவையினன். நெருப்பில் வெம்மையன். காற்றில் ஊக்கம் காட்டினோன்.

என்னிதயம் வீற்றிருக்கும் ஏரம்பா ? என்னும்
கன்னிவள்ளி காந்தநினைக் காண்பதுவும் என்றேயோ

விண்ணில் கலப்பாய் விளங்குவோன். மதியில் பரிதியில் மலிபவன். அவ்வளவுதானா!

உலகைக் காண்! இனிய உலகில் 'என்னைக் காண்! கனிந்த நிலையில் உன்னைக் காண்! என்று ஆன்மாக்கள் அறிய அறிவிப்பவன் ஆன சிவனார் மகனே! முழுதும் அழகிய முதலோனே! அலைவாய்ச் செந்தில் அரசே! என்று கூவி அழை! குறையில்லை; நிறைவு பெறுவை என்னும் பொருளில்,

காயம் கலைய, நலி அந்தகன் அணைகாலம், செய்ய
காயம், கலை அதளான், நிலம் நீர், எழில் காற்று, ஆ
காயம், கலை, அனல், அரி, சித்து ஆயினன் காதல் அழ
கா! அங்கு அலை அதிரும் கடல் செந்திலாய்! என்க,
கன்ற நெஞ்சே!

என்று தினமும் பாடிக் குறிப்பிடும் திருச்செந்தூர், பாண்டி நாட்டில் உள்ள ஒரு பழம் பதி. இப்பாட்டின் பொருளை உணர்ந்து, பதம் பிரிக்காமல் பாடினால், அப்போதும் தோன்றுகின்றது அதன் அருமை! *

ஹரா ஹரா முருகா! குமார குகா! என்னும் அன்பர் பேரொலி, அருமையான திருச்செந்திலில் அன்றும் இன்றும் என்றும் உண்டு.

---

* காயங் கலைய நலியந் தகனணை காலஞ்செய்ய
காயங் கலையத ளானில நீரழற் காற்றெழிலா
காயங் கலையன லரிசித் தாயினன் காதலழ
காயங் கலையதி ருஞ்செந்தி லாயென்க கன்ற னெஞ்சே!

என்னும் இப்பாட்டில் உள்ள மெய்யெழுத்துகளை நீக்கி எண்ணினால், அடிதோறும் பதினாறு எழுத்து அமைந்திருக்கின்றன; பாடலைப் பாடும்பொழுது, பாடுவார் உதடுகள் ஒன்றுடன் ஒன்று ஒட்டாது. திறந்த வாய் மூடாமல், பாடுதற்கு உதவுகின்ற பாடல் இது. இத்தகைய பாடல்கள், தமிழில் ஏராளமாக இருக்கின்றன. பிராணாயாம சாதனைக்குப் பெரிதும் உதவ, மூச்சு விடாது பாடும் முதல் தரமான பாடல் இவைகட்குக் கட்டளைக் கலித்துறை என்று பெயர்.

**கந்தப் பெருமா நீ கடைக்கணித்துக், காசினியின்
பந்தம் அகற்றுவதைப் பார்ப்பதுதான் என்றேயோ.**

கலியிற் கண்கண்ட கந்தப் பரமனை வந்திப்பவருள், காசிமுனிவரும் ஒருவர். அவர் கண்கள், விசாகனை யன்றி வேறு எதையும் காண விரும்புவது இல்லை. செவிகள், செவ்வேள் புகழையே சிரவணம் செய்யும். உள்ளம் குகனை உணரும். வாய், முருகா! முருகா என்று வாழ்த்தும்.

ஒருநாள் இரவு, சத்திரத்துத் திண்ணை ஒன்றைச் சார்ந்தார். படுத்தார். அயர்ந்த நித்திரை. வைகறை நேரம். கனவில் காட்சி ஆயினன் காங்கேயன்.

படை வீடுகள் ஐந்தையும் பணிந்து திரும்பு! செய்தி யிருக்கிறது பிறகு என்றான் சிவகுமரன்.

விழித்து முனிவர் வியந்தார். எம்பெருமான் கருணை இருந்தவாறு இவ்வாறோ என்று எண்ணினர். உருகியது உள்ளம். புளகிதம் கொண்டு அப்போதே புறப்பட்டார்.

திருப்பரங் குன்றத்தைச் சேவித்தார். ஆவினன் குடியானை ஆராதித்தார். ஏரகத்துப் பிரபுவை இறைஞ்சினார். தணிகையான் தாள் மலரில் தலை வைத்தார். பழமுதிர் சோலையானைப் பார்த்து மகிழ்ந்தார். அண்ணாமலையானை அனுபவித்தார். கழுகு மலையானைக் கண் குளிரக் கண்டார். இலஞ்சிக் குமரனை ஏத்தினார். பல தலங்களை இங்ஙனம் பணிந்தார். திருச்செந்தூர் நோக்கித் திரும்பினார்.

அலைவாய் உகந்த பெருமானைப் பலநாள் பிரிந்திருந்த ஆராமை தீர அழுதார். தொழுதார். என்ன என்னவோ எண்ணினார். விறுவிறுத்தது உள்ளம். ஊறி யெழும் நினைவுகளைச் சொல்லுருவாக்கி உதிர்த்தார்.

பிரபு! திருவருள் பேறு பெறுவை! இதைச் செய்! இதை யிதைச் செய்! என்று கட்டளை யிட்டே உடம்பை உதவி உலகில் அனுப்பினீர்! எந்த உயிர்க்கும், இப்படி ஒரு அறிவிப்பு இருப்பதை அறிகிறேன். எங்கள் கதையை எண்ணி நோக்கினால், இடிகிறது இதயம்.

தாய் வயிற்றில் தங்கினோம். அவளுக்குச் சுமை ஆயினோம். பிரசவ காலத்தில், வெய்யிலில் அகப்பட்ட

கனவதனில் மெய்ம்மைக் கருணையொடு சார்தருநீ
நனவதனில் வந்தொருக்கால் நாயேற் கருளுதியோ

புழுவைப்போல், வீணாக அன்னையை வெம்ப வைத்தோம்: பால் என்னும் பெயரால், அவள் உடல் சத்துவத்தை உறிஞ்சினோம். தந்தைக்குச் சிரமம் தந்ததற்கும் அளவுண்டோ? பள்ளியில், வாய்த்த ஆசிரியர் தொண்டை நீரை வற்றச் செய்தோம். மனைவி என்று ஒருத்தியை வலிந்தோம். முன்னவரை மறந்தோம். பின் வந்தவளை சுயநலங் கொண்டு நினைந்தோம். பெருகியது குடும்பம். செய்வது அறியாது திகைத்தோம்.

'மனைமக்கள் சுற்றம் எனும் மாயா
வலையைக் கடக்க அறியாதே
வினையிற் செருக்கி அடி நாயேன்
விழலுக்கு இறைத்து விடலாமோ'

எனும் போதம் உளத்தில் புகுவது இல்லை. முன்னோரை எண்ணோம்; அவர் மொழிகளைப் பொன்னே போல் போற்றோம். பயனுள அவர்தம் பரம்பரை என்று பறை யறைவோம். சமூகத்தைச் சகதி யாக்குவோம். மொழிக் கலக முழக்கம் எழுப்புவோம். அரசியல் சதுரங்கம் ஆடுவோம். உதட்டில் உறவு; இதயமோ சேற்று நாற்றம். இந்நிலையில், உம்மை மறந்து நினைத்தோம்; நினைத்து மறந்தோம். இங்ஙனம் பூமிக்குப் பாரமாகி இருந்தோம். இந்த வாழ்வில், **உமது மாபெரும் கட்டளையை மறந்தோம்!**

வருத்தும் ஆகாமியம் வளர்ந்தது. ஆகாமியம் சஞ்சிதம் ஆயது. சஞ்சிதம் பிராரத்துவம் ஆகிச் சார்கிறது. பெருகி வருகிறது இப்படியே பிறப்பு. நாங்களே வலிந்தழைக்க, படபடத்து வந்த துன்பங்களைப் பட்டோம். ஆன்ம இதயம் கதறி யழுதது. மறுபடி அவைகளை மறந்தோம்; நல்லது செய்ய நினைந்திலம். அதன் பயனைப் பகல் கனவு போலப் பாவித்தோம். இதுவோ எங்கள் தலைவிதி: சிறிது இவைகளைச் சிந்திக்கும் போது, வீணாக நெஞ்சம் வெடித்து விடும்போல் இருக்கிறதே! இன்றைய நாள்வரை, ஆன்ம உலக அநுபவம் இது.

**மனநொந்தே கூவி மயிலிறைவ என்கின்றேன்
இனமென்னைக் கைவிட் டிருப்ப தறமேயோ**

திரு-அருள்; செந்து-ஆன்மா; இல்-வீடு எனும் பொருளுடைய இப்பதியே அடைக்கல நிலயம் என்று அறிந்தேன். ஆண்டவனே! இனி அடியேன் என்றும் தங்கும் இடம் இதுதான்.

இம்மை மறுமை எதையும் வேண்டிலன். நியதியான கட்டளையை நினைவூட்டுவை என்றே, வாழ்விக்கும் உமது கோயிலை வலம் வருவேன். மயிலேறிய மணியே! அயில் ஏந்திய அரசே! சேவல் நாதச் செல்வமே! இருபுற இரு குயில் எம்மானே! அருள்க அத்தா! என்று வீறிட்டுக் கூவி விண்ணப்பித்தார்.*

ஆசை துடிக்க, உள் ஆர்வம் துடிக்க, புனித முருகன் திருவடிகளைப் பூசித்தார். பெருமித அன்பு பெருகியது. உயர்ந்த ஆறெழுத்தை உருவேற்றினார். தியான சமாதியில் தினமும் இருந்தார்.

உலகைத் துறந்து உடம்பை மறந்த அவர் உள்ளத்தில், மயிலேறும் பெருமான், கருணையுடன் ஒரு நாள் காட்சி யளித்தான்.

---

* 'கலக்குண்டாகும் புவியிடை எனக்குண்டாகும் பணிவிடை
கணக்குண்டாதல் திருவுளம் அறியாதோ'

எனும் வித்தக அருணகிரியார் விண்ணப்பத்தை, இதைப் போல முன்னொரு சமயம் எண்ணியுளம்: திருவருள் குறிப்பு தெரிவிக்கப்படும் எனும் ஆர்வத்தால் தான், கூடும் உணர்வினர் வழிபாட்டில் ஈடுபடுகின்றனர். வழிபாடு வளர வளர, கடவுள் கட்டளை புனித நினைவிற் பொங்கி எழும். அவைகளைச் செயலிற் கொணர்வது, வாழ்வதற்கு வழி. அந்நேரத்தில், அதை அசட்டை செய்தால், அது வேண்டா; இதை எண்! இப்படிச் சொல்! இதுசெய் என்று கனன்று வரும் கர்மத்தின் கட்டளை, தீய நினைவுகளாகத் திமிறி எழும்.

அந்தத் தீய நினைவுகள், வீணான செயல் உருவில் வெளிப்படும். விளைவு அதன் பின் விபரீதந்தான். இவைகளை எண்ணி இடிந்த மனத்தால், கந்தப் பரமன் கருணையை எண்ணி, கை கொடு அப்பா! கரையேற்று அத்தா! என்று கதறுகின்றது, உயர்ந்த மேலோர்தம் உணர்வு.

என்றும் உனதடியை எண்ணுமது அல்லால்
ஒன்றும் விரும்பேன் உவந்தருள வாராயோ.

அன்பனே! கோயில் என்றால், கோபுரம் தேவை. அதைக் கண்டவர்க்கு, எம்மை உணரும் எண்ணம் தோன் றும். இனிய உணர்வு, மேல் நோக்கி எழும். அதனால், கனிவு பெறும் அன்பர் கதி பெறுவர். மற்றவர்க்கோ, இம்மை மறுமை இன்பு துளும்பும்.

திருச்செந்தூர்க் கோயிலுக்குக் கோபுரம் இல்லாமை பெருங்குறை. வேதச் செய்தி, ஆகம நுட்பம், புராண இதி காசம், தேவர்கள் சிந்தனை, மாதவர் மனனம் முதலிய வற்றை, கல்லாதார்க்கும் கற்பிக்கும் அருமைக் கோபுரம், உன்னால்தான் அமைய வேண்டும். பிறக்கு முன் உனக்கு அறிவித்த செய்தி இது! அதை உன் கை ரேகை யிலும் எழுதியுளம். அதை மறந்திருக்கிறாய்; அறிவிக்க வேண்டினே; அதன்படி இன்று அறிவித்தோம்! எம்மை நம்பிச் செயலில் இறங்கு! முன்னிருந்து யாம் அதை முற்றுவிப்பம் என்று, நகை முகமாகி அருளி, திருவுருக் கரந்தான் தெய்வப் பெருமான்.

தியானம் கலைந்தது. திடுக்கிட்டது மனம். யானோ துறவி. என்னையும் ஒரு பொருளாக்கி இப்படியும் ஒரு கட்டளையோ! எம் பெருமானே! என்று கூவித் தொழுது கும்பிட்டார்.

அவருடைய குரலைக் கேட்டு, அண்மையில் இருந்தவர் உள்ளம் அதிர்ந்தது. எழுந்து வந்தனர்; விழுந்து வணங்கினர்.

ஸ்வாமி! என்ன செய்தி? ஏன் இப்படி உங்கள் திரு மேனி நடுங்குகிறது? என்று அவர்கள் விநயமாக வினவினர்.

கோபுரம்! கோபுரம் என்று கூவி எழுந்தார். ஓடினார். புனித சந்நிதியிற் புகுந்தார். அவர் போக்கு, இன்று எவர்க்கும் வியப்பை அளித்தது. தூய அன்பர்கள் அவரைத் தொடர்ந்து மொய்த்தனர்.

பாரேனோ நின்னெழிலைப் பார்த்துமகிழ் கொள்ளேனோ சேரேனோ நின்னடியர் சேவடியிற் சேயோனே.

வேல் பரமா! கர்மியான என்னை ஒரு கருவியாக்கி, இன்பக் கோபுரம் எழுப்ப எண்ணியதோ உன் திருவுள்ளம்! ஸ்தூல இலிங்கமான முதன்மைக் கோபுரத் திருப்பணி முற்றுப் பெற, முருகா! முருகா! நீயே முன்னின்று அருள் என்று, விம்மிட்டுக் கூவி வீழ்ந்து வணங்கினர்.

அஞ்சாதே! அருள் புரிவும் என்ற அறிவிப்பு, அகமுக மாகி எழுந்தது.

'வென்றுளே புலன் களைந்தார் மெய்யுணர் உள்ளந் தோறும் சென்றுளே அமுத ஊற்றும் திருவருள்' உதவுதல்

இது என்று, களிப்பு மிகுந்து முனிவர் கை குவித் தார். அதே நேரத்தில், ம்....ம்....பிடியும்! என்ற குரல்; திடுக்கிட்டுக் கண் திறந்தார். இலை விபூதி, இனிய தீர்த் தம், சந்தனம் தந்தனர் அந்தணர். விநயமொடு வாங்கினர். ஆஹா! என்ன அருமை! பெருமா! உனது கருணையே கருணை என்று, கலகல கண் மழை சிந்தினர் காசி முனிவர்.

அனுபவ ஞானிக்கு ஆறுமுகன் கட்டளை இது என்று அறிந்த செல்வர் பலர், கருங்கல் வாங்கி உதவினர். செங்கல் உதவினர் சில செல்வர். உயர்ந்த சுண்ணம் உதவினர். வந்த பொருள்கள் மலைபோல் குவிந்தன. அரிய திருப் பணியை, இனி ஆரம்பிக்க வேண்டியதுதான்.

அது சரி. பணி செய்பவர்க்குக் கூலி தர, நாள் தோறும் பணம் வேண்டுமே! அதற்கு, என்ன செய்வது? எவரைக் கேட்பது? ஒன்றும் தோன்றாத சூழ்நிலையில், உள் முகமாயினர் முனிவரர். அதற்கும் பிறந்தது அறிவிப்பு.

நலத்தொடு கால் கோள் விழா நடந்தது. அன்றே திருப்பணி ஆரம்பித்தது.

மாலை நேரம். அன்று முழுதும் பணிசெய்த ஆள் கள், கூடி நின்று கூலி கேட்டனர்.

முனிவர், வள்ளியம்மை சந்நிதிக்கு வந்தார். நின் மாலியப் புட்பக் குடலை, இறைவியின் திருமுன் இருந்தது.

ஆறுமுக மான அம்பிகையின் சேய்நின்னைத்
தேறுமுகம் ஈதென்று தெளிவிக்க வாராயோ.

அதை எடுத்தார். ஒரு பீடத்தில் வைத்தார். கண் மூடினர். சிறிது நேரம் தியானித்து இருந்தார்.

நேரம் ஆகிறதே! வீட்டிற்குச் செல்ல வேண்டுமே! பதைக்கிறார்கள் பலர். வாய் மூடி மௌனமாயிருந்தாரும் சிலர். கண் திறந்தார் காசியார்.

வரிசையாக நில்லுங்கள்! ஒருவர் பின் ஒருவராக வாருங்கள்! குறையோ நிறையோ யாமறியோம்! உழைப்பிற்குத் தக்க ஊதியத்தை உதவுபவள் அன்னை. ம்...ம்....வாருங்கள் என்றார். அவரைப் பார்க்கவே எவர்க்கும் அச்சமாக இருந்தது.

குடலையுள் கையிட்டார். உதிரி புட்பங்களை எடுத்தார். அம்மை அருள் என்றபடி, ஏந்துவார் கையில் இட்டார். உதிரி இதழ் ஆறு; அதனொடு இருந்த பொன்னோ ஏழு. ஐந்து, ஒன்பது, ஆறு, மூன்று, ஒன்று, எட்டு, இரண்டு என்று உழைப்பிற்குத் தக்கபடி, உதிரி இதழ்களொடு, அவரவர் கைக்கு வந்தது கனகம்.

> அதிகம் பெற்றவர் அகங்கரிக்க வேண்டா. குறைந்தவர் நெஞ்சம் குமுற வேண்டா. நான் ஒரு பரதேசி. நான் ஒரு கருவி. அவ்வளவே. உள்ளம் அறிவான் : உழைப்பை அறியும் உமையாள் மருமகன் !

என்றார். அதன் பின், தியானத்தில் மூழ்கினர் திருமுனிவர்.

உயிர்கள் செய்த வினையின் பயனை, தினையளவும் தவறாமல் அவரவர்க்கே திருப்புகின்றான் தெய்வப் பெருமான். அதுபோல், உழைப்பின் அளவு வருவாய் எனலை உணர்த்துகின்றாள் வள்ளியம்மை.

இது கண்ட சிற்பிகள் உடலம் சிலிர்த்தது. அஞ்சியது நெஞ்சம். அன்றுமுதல், தொழில் செய்வோர் ஒவ்வொருவரும் உண்மை உள்ளம் கொண்டு உழைத்தனர். முனிவர் மூலம், வள்ளியம்மை தந்த கூலி வாங்கினர். சிற்ப விதிப்

எத்தனைபேர் சிந்தித்தார் எத்தனைபேர் சேவித்தார்
எத்தனைபேர் என்போல் ஏத்தினரோ எம்மானே.

படி சிகரங்கள் சிறந்தது மிளிர்ந்தன. வானோர் உருவம் பல வாய்த்தன. பக்தி வெள்ளம், பயனான கோபுரமாகிப் பலித்தது.

வேள்விச் சாலை எழுந்தது. வேத நாதம் விளைந்தது. கும்பாபிஷேகம் நிகழ்ந்தது. எல்லாம் பொருளால் ஆகும் என்கிறது ஏழை இதயம், அருளால் தான் அனைத்தும் ஆகின்றன என்று அறிவிக்கும் வரலாறுகட்கோ அளவில்லை. காசு ஒன்றும் இல்லாத காசி முனிவர் மூலம், அரிய இக் கோபுரத்தை எழுப்பியது திருவருள் என்று அறிகின்றோம் அல்லவா!

கோபுரம், ஸ்தூபி, வாயில், மண்டபம், பலிபீடம், கர்ப்பக்ருகம், மூர்த்தி எனும் ஏழையும், வாழ இருக்கும் ஆன்மா வணங்கும்.' இந்த ஏழனுள், முதலானது கோபுரம். தூய அதுவே முதலில் தொழுதற்கு உரியது.

சேய்மையரும் சேவிக்க, என் மூலம் கோபுரம் எழ வேண்டும்; கந்தப் பரமா! இது உன் கட்டளை. பிறக்கு முன் அறிவித்து அனுப்பினை! மறந்தேனுக்கு நினை வூட்டினை! முன்னின்று நீயே முடித்து வைத்தாய்! அத்தா! உனக்கே அடைக்கலம் என்று பிரார்த்தித்து, இன்பம் எய்தியது முனிவர் இதயம்.

திருச்செந்தில் கோபுரத்தைத் தரிசிக்கும் போதெல்லாம், எம்பெருமான் திருவருளால் எழுந்தது இது என்று நினைந்து நெகிழ்கிறது அன்பர்கள் நெஞ்சம்.

திருப்பணியை நிறைவேற்றிய முனிவர் திருவுருவை, ஸ்ரீ வள்ளியம்மை சந்நிதியில் உள்ள அரிய தூண் ஒன்றில் அமைத்து, நற்கதிக்கு வழி காட்டிய நாயகமே! மாதவ மணியே! சுந்தரவடிவ சூரியனே! சாந்த குணமுள சந்திரனே! வாழி நீ ஊழி என்று, அவரை இனிது துதித்து, திருவார் இன்பம் கொள்கிறது திருச்செந்தூர்!

வாழ்க முருகன் அடியவர்!

மன்னுமுன்றன் பொன்னருளை மகிழ்ந்துபலர் போற்ற
அன்னவரைக் கண்டெளியேன் ஏத்தஅறி வித்தாயோ.

அருணகிரியும் ஐம்பூதத் தலங்களும்

(திரு சே. த. ராமலிங்கம் பிள்ளை B.A.,B.T.)

தலச்சிறப்பு :—

இத் தலத்திற்குரிய சிறப்புக்கள் மிகப் பல. அன்று மாலயன் காண வடிவொரு சோதியான மலையாகத் திகழ்ந்தசோணகிரி, அதன் அனல் வடிவு மாறி மற்ற மலைபோல் விளங்கலாயிற்று. ஆயினும், "அதன் உச்சியில் கார்த்திகை மாதத்தில் கிருத்திகையன்று ஒரு பெருஞ்சோதி தோன்றும். அதனை



வணங்கினர் பசி, பிணியின்றி உலகில் மன்னி வாழ்வர். இடையூறு அனைத்தும் நீங்கும். வணங்கினவர்களின் கோத்திரத்தில் இருபத்தொரு தலைமுறையி னுள்ளவருக்கும் முத்தியடையுமாறு இறைவன் வரம் அருளுவர்" என்பதனை,

"கார்த்திகைக்குக் கார்த்திகை நாள் ஒருசோதி
மலைநுனியிற் காட்டா நிற்போம்
வாய்த்த அந்தச் சுடர்காணில் பசிபிணியில்
லாதுலகில் மன்னி வாழ்வார்.
பார்த்திவர்க்கும் அருந்தவர்க்கும் இடையூறு
தவிருமிது பணிந்தோர் கண்டோர்
கோத்திரத்தி லிருபத்தோர் தலைமுறைக்கும்
முத்திவரம் கொடுப்போ மென்றார்"

என அண்ணாமலையார் திருவாக்காகவே வரும் பகுதி நினைக்கத் தக்கது.

ஒன்றும் அறியேன் ஒருதுணையும் கொண்டிலனால்
என்றும்நின் பொன்னருளை ஏத்தஅறிந் தேனே.

தேவியாராடல் :—

கயிலையண்ணல் திருக் கண்களால் உலகனைத்திற்கும் அண்ட வெளி அருளுந் திறத்தை விளக்குதற் பொருட்டுத், தேவியார் வேடிக்கையாக ஓடிவந்து பரமனது அருள் விழிகளை இரு கரங்கொண்டு பொத்தினர். அவ்வளவு தான்! உலகம் இருண்டது. உயிர்கள் எல்லாம் காரிருள் வயப்பட்டுக் கதிகலங்கின. இஃதறிந்த மூர்த்திகள் மூவரும் முதல்வனிடம் முறையிட்டனர். இறைவனும் அருள் கூர்ந்து நுதல்விழி திறந்து உலகிற்கு ஒளி வழங்கினன். இப் பாவ நீக்கத்திற்கே தேவியார் காஞ்சியில் கம்பா நதிக்கரையில் தவமிருந்து இறைவனைப் போற்றினர். பெருமான் விடைமேல் வந்து காட்சி வழங்கினன். தேவி வணங்கி, "உமது இடப்பாகம் தருகென" வேண்டினள். பரமனும் அண்ணாமலைக்கு வருமாறு பணித்தனன். பின் அம்மையும் திருவண்ணாமலையில் கௌதமர் வழிபடும் ஆச்சிரமத்தை யடைந்து,

"கொந்தளகம் சடைபிடித்து விரித்துப் பொற்றோள்
குழைகழுத்தில் கண்டிகையின் குப்பை பூட்டி
உந்துமர வுரிநிகர்பட் டாடை நீக்கி
உரித்தமர வுரிசாத்தி உத்தூ ளத்தால்
விந்தைதிரு நீறணிந்து கனற்குட் காய்ந்து
விளங்குமூ சியின்ஒருகால் விரலை யூன்றி
அந்திபகல் இறைபதத்தின் மனத்தை யூன்றி
அரியபெருந் தவமுயன்றாள் அகில மீன்றாள்"

என்றவாறு தவம் புரிந்தாள். கார்த்திகை மாதத்தில் ஒரு விழா நடத்தினள். மலைமேல் ஒரு பேரொளி தோன்றியது. அதில் சிவனார் தோன்றித் தேவியை மலைவலஞ் செய்யுமாறு பணித்தார். அவளும் அப்படியே செய்தாள். ஈசான்யத் திக்கில் அம்மை வரும்போது, சிவனார் விடைமேல் வந்து அன்னையை அழைத்து இடப்பால் இருத்தி அருள் புரிந்தார். இவ் வரலாற்றை இரத்தினச் சுருக்கமாக நமது திருப்புகழ்த் தெய்வப் பாவலர்,

---

கடல்கலங்க வேல்விடுத்த கட்டழகா! என்றன்
இடர்க்கடல் வற்ற அருள்செய்வது நீ என்றேயோ.

"கவுதம புநித முநிதொழ அருணையில் அறம்வளர்
கருணையுமை தரு சரவண சுரபதி—பெருமாளே"
"அரு மறையவர் அந்தர முறைபர் அன்
புடையவருய அன்று—அறமேவும்
அரிவையும் ஒரு பங்கு இடடையவர் தங்கு
அருணையி லுறையும்—பெருமாளே"
எனக் குறிப்பது மகிழற்குரியது.

பிறசிறப்புகள் :—

மேற்குறித்தவை அன்றி இத் தலத்தில் சிவனுரே வல்லாள மகாராஜனுக்கு மகவாகி மகிழ்வூட்டியதுடன், இறுதிச் சடங்கும் மாசிமகப் பெருவிழாவில் நடத்துகிருர். முன்பொரு சாபத்தால் வச்சிராங்கத பாண்டியனுக மண்ணில் வந்த இந்திரன், ஒரு சமயம் வேட்டைக்குக் குதிரையேறிச் சென்ருன். ஒரு புனுகு பூனையைக் கண்டு அதனைத் துரத்தினுன். அது அண்ணுமலையைச் சுற்றி ஓட, இறைவன் இருக்கை இது என எண்ணுமல், பாண்டியனும் பரியேறிய வண்ணம் அதனைத் தொடர்ந்தான். உடனே குதிரையும் புனுகு பூனையும் விழுந்திறந்து ஒளியுடன் எழுந்தன. அவை காந்திசாலி, கலாதரன் என்ற இரு கந்தருவர்கள். துருவாசரது நந்தனவனத்தில் புகுந்து பூப்பறித்ததற்காகக் குதிரையாகவும், புனுகு பூனையாகவும் சாபமேற்றனர். அவைகள் திருவண்ணுமலையை வலஞ்செய்த புண்ணியத்தால் சாப வீடு பெற்றன. மலையைக் காலினுல் வலம் வராமல் கடும்பரி யேறி வலம் வந்ததால் பாவம் ஏறியது. அதனைப் பாண்டியனறிந்து அண்ணுமலையாருக்குச் சிறந்த திருப்பணி செய்து, மலைவலம் வரும்போது பரமன் சாப வீடு செய்து இந்திரனுக வரந்தந்து மறைந்தார். இவ் வரலாற்ருல், பெருமான் ஆலயஞ் செல்வோர் வாகனத்தில் செல்லலாகாது என்று அறிகிருேம்.

ஒருசமயம் சூரியன் தன் தேரேறி அருணைமலை யுச்சிமேல் செல்ல, மலை புகைந்து வெடித்து அவனுடைய தேர்

தாண்மலரைப் போற்றும் தவவாழ்வு தந்தருள
ஆண்மையுள ஐயா நீ ஆர்த்துவர லென்றேயோ.

எரிந்தது. குதிரைகள் கரிந்து போயின. இதன் காரணத்தைப் பிரம தேவர் மூலமாகச் சூரியன் அறிந்து, அண்ணுமலையை வணங்கி வலஞ்செய்யப் பரமன் காட்சி தந்தருளினுர். அன்று முதல் மலையின் உச்சிவழிப் போகாமல் மலையை வலங்கொண்டே செல்ல லாயினன்.

பிரதத்தன் என்ற காசி மன்னன் சோழநாட்டுத் தலங்களை வழிபட எண்ணித் தெற்கு நோக்கி வந்தான். திருவண்ணுமலை ஆலயமுற்றுப் பெருமான் திருமுன் பணிந்தெழுதும், ஆராதனை முடிவில் அரனுர் திருமுன் அழகுற ஆடல் நிகழ்த்திய அணங்கின் மேல் தள்ளொணுக் காதல் கொண்டான். அவ்வளவே அவனது முகம் குரங்கு முகமாயிற்று. இதைக் கண்ட எல்லோரும் அவனை எள்ளி நகையாடினர். அரசன் மிகவும் வருந்தித் தன் தவறுதலை உணர்ந்து, தான் கொணர்ந்த வாகனங்கள் பெண்கள் முதலியவற்றை ஆலயத்திற்குக் காணிக்கையாய்த் தந்து பல நாள் வழிபட்டிருந்தான். பெருமான் திருவருளால் அவனது குரங்கு முகமும் மாறியது.

முன்னொருகால் பிரமதேவரால் சாபமேற்ற அஷ்ட வசுக்கள், அண்ணுமலை எட்டுத் திக்கிலும் இருந்து தவம் செய்ய, சிவனுர் எட்டு முகமாய் எழுந்தருளி சாபநீக்கி அருளினுர்.

பிரமதேவர், அழகுற்ற பொருள்களில் எல்லாம் ஒவ்வொரு எள்ளளவு எடுத்து ஒரு பேரழகுடைய பெண்ணை உண்டாக்கினுர். அவளுக்குத் திலோர்த்தமை (அழகுகளில் எல்லாம், திலம்-எள் அளவு சேர்ந்தவள்) எனப் பெயர். அவளுயிர் பெற்றதும், பிரமன் தன் மகளென்றும் எண்ணுதே அவள் மீது காதல் கொண்டான். அவள் அருணசலேசரை ஓர் பெண் மான் உருவில் போய்த் தஞ்சமென்றடைந்தனள். பிரமன் ஒரு கலைமான் உருவமேற்று அவளைத் தொடர்ந்தான். உடனே விமலர் ஒரு வேடனுருவுடன், நாலு வேதங்கள் நாய்களாய்த் தொடர்ந்துவரத்

பத்தர் துயரைப் பறக்கடிக்கும் பார்த்திபநீ
சித்தம் இரங்காமை என்குறையே செவ்வேளே.

தோன்றினர். அது கண்ட பிரமன் தன் உணர்வுபெற்று வணங்க, அண்ணாமலை அண்ணல் அருள் கூர்ந்து, மலையைத் தரிசித்த மாண்பினுல் அவனது மாற்ற முடியாத மாபாதகத்தை மன்னித் தருளினர்,

இவை போல்வன பிறவு முள்ளன. எனவே மலையைக் கண்டாலும், வலஞ் செய்தாலும், உள்ளங் கனிந்து தியானித்தாலும் அருள் சுரப்பர் அண்ணாமலையார் என அறிகிறோம். இத் தலத்தில் இந்திரன் முதலிய இமையவர்கள், முனிபுங்கவர்கள் முதலியோரன்றிக் குரு நமசிவாயர், குகை நமச்சிவாயர், திருப்புகழளித்த அருணகிரிநாதர் ஆகிய மேலோர்களும் அருள் பெற்றுள்ளனர்.

அருணகிரி பெற்ற அருள் :—

சிறப்பிற் சிறப்பாக நம் அருணகிரி நாதர் பெற்ற அருட் சிறப்பைப் பேசுவாம். நம் அருணை முனிவரது வரலாறு எக் காரணம் பற்றியோ உண்மை அறியக் கூடாதபடி பலவாறு வழங்கப் பெறுகிறது. ஆதலின் ஆராய்ச்சி என்னும் அல்லற் கடலில் ஆழாதே எல்லோரும் ஒப்ப முடிந்ததாய், நமது நாவலர் திருவாக்கிலிருந்தே பெறத் தக்க சில குறிப்புக்கள் மட்டுமே இங்குத் தரப்படுகின்றன.

ஓசைமுனிவரான திருப்புகழ் ஆசிரியர்க்குத் திருவண்ணாமலையே அவதாரத் திருத்தலம் என்பது ஆராய்ச்சியாளர் அனைவருக்கும் ஒப்ப முடிந்ததே. அங்கே செவ்வேட் பரமன் திருவருளால் அவதரித்த நம் பாவலர், சிங்கார மடந்தையர் தீநெறி போய் மங்காமல்,

"ஆடக விசித்ரகன கோபுர முகப்பில் அருணபுரியில்
நிற்கும் அடையாளக் காரனும்
ஆணவ அழுக்கடையும் ஆவியை விளக்கி
அநுபூதி அடைவித்த தொரு பார்வைக் காரனும்"
"அறிவை அறிதத்துவமும் அபரிமித வித்தைகளும்
அறிஎன இமைப் பொழுதில் வாழ்வித்த வேதியனும்"

நீயே கதியென்று நிச்சயமா நம்பியுளேன்
நாயேனை ஆளஎன்று நண்ணுவையோ நாயகமே.

என்ற முறையில் எல்லாம் திருவடி சூட்டி அருட்கண் அருளி ஆட்கொண்டனர்.

"முத்தைத் தருபத்தித் திருநகை,
அத்திக்கிறை சத்திச் சரவண
முத்திக்கொரு வித்துக் குருபர—
என ஓது"

என்று அடியெடுத்துதவி சித்ரகவித்துவ சத்தமிகுத்த சிவமார் திருப்புகழ்த் தெய்வப் பாடல்களைப் பாடுமாறு பரிந்துதவி அருளினர். "அருணகிரிநாத" என்ற அற்புத தீக்ஷா நாமமும் தந்து, "சும்மா இரு" என்ற மோன ஞானோபதேச மாதியனவும் செய்து சித்தந் தெளிவுறச் செய்தருளினர். இவருடைய கனவிலும் நனவிலும் பல கால் காட்சி அளித்தும், அநேக அற்புதங்கள் நிகழ்த்தியும், தமது கருணையைக் கந்தவேள் பலவகையில் வெளிப்படுத்தினர். வில்லிபுத்தூர்ப் புலவருளம் நாணுமாறு கந்தரந்தாதி பாடச் செய்தும், சம்பந்தாண்டான் என்ற சத்திபத்தன் தருக்கடங்க, பிரபுடதேவமா ராஜனுடைய உள்ளங் களிப்பிஞல் கரையழிய, 'அதல சேடனாராட' என்ற திருப்பதிகம் பெற்றுக் கம்பத்திளையனாய்க் காட்சி வழங்கினர் என்பது, பல திருப்புகழ் பாக்களின்று நாம் அறியலாகும்.

"கருணை அடியரொடு அருணையி லொருவிசை
சுருதி புடைதர வருமிரு பரிபுர
கமல மலரடி கனவிலும் நனவிலும்—மறவேனே"

"ஆபாதனேன் மிகப்ர சித்தி பெற்று இனிது உலகேழும்
யானைக நாம அற்புதத் திருப்புகழ் தேனூற ஓதி
எத்திசைப் புறத்தினும்"

"ஏடேவு ராஜதத்தினைப் பணித்ததும்"

"உலகினில் அனைவர்கள் புகழ்வுற அருணையில்
ஒரு நொடிதனில் வரு-மயில் வீரா"

(தொடரும்)

ஓடுகின்றான் சூரியன்தான் அவன்பின்னே ஒவ்வொரு ஓடுகின்ற வேல்முருகா உவந்தருள வாராயோ. [நாள்

தாயும், சேயும்.

(கிருபானந்தவாரி.)

ஒரு தாய்க்கு எத்தனையோ பொறுப்புகள் இருக்கின்றன. பற்பல நெருக்கடிகளும் நேர்கின்றன. என்ன செய்வது என்ற திகைப்பும் வருகின்றது. குழந்தைகள் சிலசமயம் ஏதாவது குறும்புகள் செய்யும். தந்தையார் ஓங்கி ஒரு அடி கொடுப்பார். குழந்தை தாயிடம் ஓடி வந்து அழும். அம்மையின் மனம் பதறும். பெற்றமனம் பித்து அல்லவா? கணவனையும் கண்டிக்க முடியாதல்லவா? சிலசமயம், பிள்ளைகளுக்குள் கலகம் வந்துவிடும். ஒன்றை ஒன்று அடித்துக் கொள்ளும். இரண்டும் தாயிடம்வந்து அழும். எந்தக் குழந்தை பக்கம் சார்ந்து யாரைத் தண்டிப்பது என்று அறியாமல் தாய் திகைப்பாள். குற்றம் யாரிடம் உளது என்றும் அறியாது மயங்குவாள்.

இத்தகைய ஒரு தயக்கம் உமாதேவியாருக்கும் ஒரு சமயம் நேர்ந்தது.

திருக்கயிலாய மலையில் சிவபெருமானும் உமாதேவியாரும் மணித்தவிசின் மீது வீற்றிருந்தார்கள். அருகில் சிவகுமாரர்களாகிய விநாயகரும், முருகரும் விளையாடிக் கொண்டிருந்தார்கள்.

முருகவேள் சிவபெருமானுடைய திருக்கரத்தில் உள்ள உடுக்கையைப் பார்த்தார். அது படைப்புத்தொழிலைச் செய்யுந் திறனுடையது. அதனை ஒரு பறை வாத்தியம் என்று திருவுளத்து எண்ணினார். அதனைத் தடி கொண்டு அடித்து விளையாடவேண்டும் என்று கருதினார். கருதிய குமாரமூர்த்தி ஒருசிறு தடியைத் தேடுவா ராயினார். விநாயகர் திருக்கரத்தில் உள்ள யானைக் கொம்பைக் கண்டார். அதனைப் பிடுங்கி உடுக்கையை அடிக்க நினைத்தார். ஓடி பெரிய வல்லபமுடைய விநாயகருடைய திருக்கரத்

அன்புகொண்டு சீவர்களை ஆளவரு வாயென்றூர்
இன்புபெற நின்னையே எண்ணுமெனை ஏலாயோ.

துள்ள கொம்பைப் பிடித்து ஈர்த்தார். விநாயகர் அதனைத் தர மறுத்து எதிராக அவரும் ஈர்த்தார்.

இப்படி இருபிள்ளைகளும் இழுத்துக்கொண்டு கலகம் புரிவதை அம்மை பார்வதி தேவி கண்டார். புன்முறுவல் பூத்தார். பிள்ளைகளின் செயலை நோக்கி இரங்கினார். இரு மைந்தர்கட்கும் நடுவிற்சென்று "முருகா, ஏன் அண்ணனுடைய கொம்பைப் பிடித்து இழுக்கின்றாய்? விட்டுவிடு" என்றார்.

"எனக்கு அது வேணும். இதோ இந்த உடுக்கையை அடிக்கவேணும்.......ம்...." என்று சிணுங்கினார் முருகர்.

உமையம்மையார் விநாயகரைப் பார்த்து, "குழந்தாய்! கணேசா! இந்தக் கொம்பைக் கொஞ்சநேரம் தம்பியிடம் கொடுத்துவை. பிறகு வாங்கி உன்னிடம் தருவேன்" என்றனர்.

"நான் தரமாட்டேன். தம்பி தகப்பன் சாமி. பிறகு தரமாட்டேன் என்பான்: அப்பாவுக்கும் உபதேசம் பண்ண ஆரம்பித்து விடுவான். ஆகவே நான் கொடுக்கமாட்டேன்" என்றார் விநாயகர்.

அம்மையார் என் செய்வார்? இருவரும் இப்படிக் கொம்பின் இருபுறத்தைப் பற்றி இழுத்துக் கொண்டு இடர்ப்படுவதைத் தடுத்து சமாதானம் புரியவேண்டுங் கடப்பாடு அம்மைக்கு உண்டுதானே. சுற்று முற்றும் பார்த்தார்; விநாயகர் கொம்பு போன்ற ஒரு அழகிய கொம்பு அங்கு காணப்பெறவில்லை. பிரமதேவன் தேடிக் காணாத பின்னாகனாகிய பெருமானுடைய திருமுடிமீது பிறைமதி யழகாக இருப்பதைக் கண்டனர். உடனே இறைவனுடைய மணி முடியின் மீது விளங்கிக் கொண்டிருந்த பிறையை எடுத்து இளைய பிள்ளையின் கையில் கொடுத்தருளினார்.

உடனே முருகன் பெரு மகிழ்ச்சியுற்று, பிள்ளையாருடைய கொம்பை விடுத்து, அம்மைதந்த பிறையை வாங்கி

கருத்தில் உயர்தருமுன் கஞ்சமலர்த் தாளை
இருத்தி மனமுருகி ஏத்தஅருள் எம்மானே.

அப்பாவுடைய திருக்கரத்தில் உள்ள தமருகத்தை அடித்து முழங்கி ஆடல் புரிந்தனர்.

இந்த அழகிய திருவிளையாடலை அழகாக திருவிடைக் கழி முருகன் பிள்ளைத்தமிழ் நமக்குத் தெரிவிக்கின்றது. அத்திருப்பாடல் இதோ! படித்து இன்புறுங்கள்.

ஆக்கும் பெருந்தொழில் அமைந்த ஒரு தமருகம்
அவாவுபறை யென்றுளங் கொண்
டன்னதை யடித்திடக் கைக்கொளுங் குணில்தேடி
அருகு விளையாடி நின்ற
தாக்குந் திறற்களிற் றொருகா தலக்கோடு
தனையுறப் பற்றி யீர்க்கத்
தவாவலிகொள் அக்களிறும் எதிர்ப்பற்றி ஈர்க்கத்
தழைத்திடு கலாம் உணர்ந்து
வாக்குஞ் சுவைத்தேறல் மாலைக் குழல்தாய்
வயங்குற நடுப்புகுந்து
மறையோ திமந்தேடு வேணிப் பிறைக்குணில்
வயக்கக் கொடுக்க உவகை
தேக்குந் திறற்குக இடைக்கழி யுடைக்குழக
சிறுதேர் உருட்டி யருளே
திருமால் வயிற்றடை பெருந்தேர் உருட்டிசேய்
சிறுதேர் உருட்டியருளே.

ஆப்பில் முளைத்த அண்ணல்

(தணிகைமணி வ. சு. செங்கல்வராய பிள்ளை)

திரு ஆப்பனூர் என்பது ஒரு சிவஸ்தலம். அது இப்போது திரு ஆப்புடையார் கோயில் என வழங்கு கின்றது. இத்தலம் மதுரை மீனாட்சியம்மை கோயிலுக்கு வடக்கே ஒரு மைல் தூரத்தில் இருக்கின்றது. மத்தியில் வைகையாறு ஓடுகின்றது. திருஞான சம்பந்த சுவாமி களின் திருப்பதிகம் பெற்றதலம் இது. சுவாமி பெயர் திரு ஆப்புடையார். தேவி-குரவங்குழலம்மை. 'குரவங் கமழ் குழலாள்' குடி கொண்டு நின்று விண்ணோர் விரவுங்

பழவினைகள் யாவும் பாற்றுமுயர் முத்தி
வழிவிளக்க நீவருதல் என்றோ வலியோனே.

திருமேனி எனத் தேவாரத்திலே தேவியின் இப்பெயர் திகழ்கின்றது. தீர்த்தம்-இடபதீர்த்தம்.

சோமநாயகன் சுந்தர நாயகன் புரந்தது மதுரை மாநகரம்—எனப்புகழ் பெற்ற மதுரை மாநகரில், முன் பொருகாலத்தில் 'சோழாந்தகன்' எனப் பெயர் பெற்ற ஒரு பாண்டியன் அரசாண்டு வந்தான். அவன் போரில் மகாவீரன்; கலையெலாம் வல்லவன்; செங்கோல் செலுத்திய செல்வன்; பகைவர், கள்வர், விலங்குகள் இவை ஊறு செயாவண்ணம் உலகைப் புரந்தவன்; ஒரு நாளும் தவறாது சிவ தரிசனம் செய்த பின்பே உணவு கொள்ளும் மகாவிரத சீலன் என்று உலகெலாம் பரந்திருந்த புகழ் படைத்த புண்ணிய மூர்த்தி அவன். திருமகள் கொழுநனும் திருமால் போன்ற சிறப்பும், வள்ளி நாயகனும் முருகவேள் போன்ற பீடும், ரதி கணவனும் மன்மதன் போன்ற அழகும் கொண்டவன். இத்தகைய மேம்பாடுகளை உடைய அந்த அரசன், புலி முதலிய துட்ட மிருகங்களை வேட்டையாடக் கருதி, மந்திரிமார், சேனபதி முதலிய பரிவாரங்களுடனும், பம்பை, தடாரி, பறை, சங்கம், துடி முதலிய வாத்தியங்களுடனும் புறப்பட்டுக் காட்டுக்குள் நுழைந்தான். கலைமான், காட்டெருமை, புலி, முயல், பன்றி, யானை முதலிய விலங்குகள் வெருண்டு ஓட, அவைகளின் ரத்த ஆறுபாய அம்புகள் எய்து அவைதமை மடக்கி அடர்த்தான். இங்ஙனம் வேட்டை யாடும்போது ஒரு மான், இவன் எய்த அம்புக்கும், பின் தொடர்ந்த நாய்களுக்கும் அகப்படாமல் ஓடிற்று. அந்த மானை விடாது அரசன் பின் தொடர்ந்து ஓடினன்; உடன் வந்த பரிவாரங்கள் பின்பட்டு நின்றன. இவ்வாறு வெகு தூரம் தொடர்ந்து ஓடி அந்த மானை அம்பெய்தி வீழ்த்தினன்; அந்நேரத்தில் மாலைப் பொழுதும் அணுகிற்று; அரசன் இளைப்பும் பசியும் வருத்த ஒரு மரத்தின் நீழலில் சோர்வுடன் மயக்குண்டு வீழ்ந்தான். அரசனைத் தேடி அலைந்த

சோதியுருக் காட்டுதியோ தூயஅருள் தோன்றுறுமோ
ஆதிகுரு மூர்த்திநீ அறிவிக்க வேண்டாவோ.

மந்திரிமார் முதலானோர் அரசன் கிடக்கும் இடத்தை அணுகி, அரசனது நிலையைக் கண்டு துணுக்குற்றனர்.

'அரசே! எழுக, எழுக' எனக் கூறியும் அரசன் மயக்கம் தெளியாது கிடத்தலைக் கண்டு அச்சமுற்றுப், பனிநீர் முதலிய தெளித்துச் சிகிச்சை செய்ய அரசன் கண் விழித்துச், 'சோம சுந்தரப் பெருமானே' என மெல்ல உரைத்தான். அமைச்சர்கள் உடனே "அரசே! மிக மெலிவு கொண்டுள்ளீர்; அமுதன்ன உணவு சிறிது உட்கொண்டால் அயர்ச்சி நீங்கும்" என்றார்கள்; அரசன் பொழுது போனதைக் கண்டு, "நான் சுயம்பு லிங்க தரிசனம் செய்யாமல் தேவாமிருதம் கிடைத்தாலும் உண்ண மாட்டேன்; அதை விஷம் போலக் கருதுவேன் என்றான். அப்போது உடனிருந்தோர், 'அரசே, இந்தக் காட்டிடையே சுயம்பு லிங்கம் எங்குக் கிடைக்கும்? உயிர்போகும் நிலையில் வாடியுள்ளீர்களே' என வருந்திக் கூற, அரசன் "புல்லின் நுனியில் உள்ள பனிபோலவும், நீர்க்குமிழி போலவும், வானவில் போலவும் விரைவில் மறைந் தொழியும் இவவுடற் சுமையை நம்பி நான் என் விரதத்தைக் கைவிடேன். சிவதரிசனம் கிடையாவிடின் என் உயிர் தொலைந்து போகட்டும்" என்றான். அப்போது அங்கிருந்த அறிஞர் சிலர், நாங்கள் போய்த் தேடிச் சுயம்பு லிங்கம் எங்கேனும் இக்காட்டிடையே உளதோ எனக் கண்டு வருகிறோம் எனக் கூறி அகன்றனர். அரசன் இறந்து விடின், பிள்ளை கூட இல்லையே, அரசாள; அரசனை இச்சமயம் காவாது விடின் நாம் முட்டாள் பட்டம் பெறுவோம் எனத்தேர்ந்து ஒரு சூழ்ச்சி செய்தனர்; அந்தக் காட்டில் சிறிது தூரத்தில் ஒரு மணற் பரப்பு இருந்தது; அங்கு நன்கு அலர்ந்த, செழுமை வாய்ந்த, கொன்றை மரம் ஒன்று இருந்தது; அந்த மரத்தின் அடியில்—ஆப்பு ஒன்றை—பெருமுளை ஒன்றை—நிறுவி, அதற்குப் பட்டாடை சாத்திச், சந்தனம் ஆகிய தேய்வைகளைப் பூசி, மலர்மாலை சூட்டி அலங்கரித்துக்

பாமாலை சூட்டிப் பரவுகின்றேன் பேறுபெறக்
காமாரி மைந்தா உன் கடைக்கணருள் காணேனே.

கண்டவர் உள்ளம் கவர்ச்சி யுறும்படி ஒரு இலிங்க ரூபத்தை அமைத்தனர். பின்பு, ஒருவர் பின்பு ஒருவராக அரசனிடம் ஓடி வந்து, அரசே! என்ன அதிசயம்! தேடி அலைந்த அரி-அயனுக்கு எட்டாத மூர்த்தி, இங்கு, அருகே, சுயம்பு மூர்த்தியாய்க் கொன்றை மர நிழலில் உங்கள் அன்புப் பிடியுண்டு காட்சி அளிக்கின்றார். என்னே! எம் பெருமான் திருவருள்! என்றார்; ஆடினார், பாடினார்.

" ஒருவர் பின் ஒருவராயங் கோடிவந் தரசே! தேடும்
இருவர் மற் றெவருந் தேருச் சுயம்புவந் தெளிதின் இந்தப்
பெருவனந் தனில்நின் அன்பிற் பிடியுண்டு பொன்பூங்
கொன்றைத்
தருநிழல் இருப்பக் கண்டேம் தம்பிரான் அருளி தென்று.'
'ஆடுவார், அயல்நின் றாரைத் தழுவுவார், அங்கும் இங்கும்
ஓடுவார், ஆனந்தம் போல் உரைமொழி குழறிக் காட்டிப்
பாடுவார், பாண்டி வேந்தைப் பரவுவார், புளகப் போர்வை
மூடுவார், நயன நீருள் முழுகுவா ராகி மொய்த்தார். ''

இங்ஙனம் இவர்கள் கூறி ஆடின நிலையைக் கண்ட அரசன் பெருமகிழ்ச்சியுற்று, சுயம்பு மூர்த்தியை வணங்க எழுந்து, தமது கைகளைத் துணைவர்கள் பற்ற மெதுவாய் நடந்து சென்றான்; தூரத்தே வரும்பொழுதே பெருமானது திருக்கோல தரிசனம் புலப்படக் கண்டான்; கைகளும் தலைமீதேறக் கண்ணில் ஆனந்த வெள்ளம் மெய்யெலாம் பொழிய வேத முதல்வரைப் பணிந்து போற்றிப் பரவினன் பணிந்தான். தன் விரதம் இங்ஙனம் நிறைவேறவே, மகிழ்ச்சியுடன் நீர் பருகி, மெய்வருத்தம் நீங்கி மந்திரிகளை நோக்கி, 'இறந்துபோம் தருணத்தில் இருந்த எனக்கு உயிர்ப்பிச்சை அருளிய மூர்த்தி இங்கே காட்டிடையே இருக்க, கண்ணிலாதவன் போல நான் போய் நாட்டிடையே நாள் கழிப்பது நன்றன்று; ஆதலால் இந்தக் காடு நாடாம் படிச் செய்யவேண்டும்; எம்பெருமானது திருக்குறிப்பை அறிவேன்' என்று கூறிச் சிவலிங்க உருவை அணுகிக் காண நடந்தான். அப்போது மந்திரிமார், தங்கள் சூழ்ச்சி

வெளியாய்விடும் என அஞ்சி அரசனுக்குத் தெரியாது ஓடி மறைந்தனர். அருகிற் சென்று கவனித்த அரசன் ஆப்புவடிவாய் இருந்த அத்தன்மையைக் கண்டு, 'அந்தோ! சுயம்பு மூர்த்தி என என்னை ஏமாற்றி விட்டார்களே; நான் கொண்டிருந்த விரதம் பங்கமாய் விட்டதே! இங்ஙனம் மோசம் செய்து விட்டார்களே' எனப் பெருங் கோபம் கொண்டு, புலிபோல் சீறி வாளை உருவி நோக்க, மந்திரிமார் எவரும் காணோம். இனி நான் உயிர் தரிக்க மாட்டேன். உலகம் என்னை ஏசும். இறைவா! எடுத்த விரதம் இது காறும் தவறாதவன் நான் என்பது உண்மையாயின், இந்தக் கொன்றையடியில் இந்த ஆப்பே சிவலிங்கக் குறியாக மாறித் திகழவேண்டும்; அங்ஙனம் திகழாவிடின் இவ்வாளால் என் கழுத்தை அரிந்து மாய்வேன்' என்று கூறினான். அப்போது உடனே ஒரு வாக்கு, "தென்னர் சிகாமணியே! செங்கோல் வேந்தே! எம்பால் அன்பா! விரதநெறி சிறிதும் பழுதுபடவில்லை. உனது அன்பெனும் பிடியிற்கட்டுண்டு, இந்தக் கொன்றைமர நிழலிலே ஏழுலகங்களுக்கும் கீழ் ஊடுருவும்படி சுயம்பு மூர்த்தியாய், "ஆப்புடைய ஈசன்' எனத்தோன்றியுள்ளோம். நீ தேவியின் திருவுருவொன்று" குரவங் கமழ் குழலாள் "என்னும் திருப் பெயருடன் ஸ்தாபித்துப் பூசிப்பாயாக"—என அசரீரியாய் எழுந்ததை அரசன் கேட்டுத் தனது கலக்கம் நீங்கிக் கைகூப்பித் தொழுது—

"சிவபிரானைத் தழுவினான், புயங்கள் ஓங்கி
வீங்கினான், ஆடிப்பாடி விம்மினான், விம்மி கண்ணீர்
தூங்கினான், ஓடியாடி வனமெலாம் துகைத்தான் துள்ளி"

இங்கிகழ்ச்சியைக் கண்ட வானோர் பூமழை பொழிந்தார்! பாண்டியன் கீர்த்தியை இடைவிடாது துதித்தார். பாண்டியனும்—

"அடியேன் நினைத்த வண்ணம் அருளுருவாகி யிந்தக்
கடிகமழ் வனத்தும் வந்து காட்சி நீ கொடுத்தவற்றால்

சிவகிரிவாழ் தேவே சீர்சிறக்கும் மேனியனே
கவலைதீர்ந் துன்றன் கழலிணையில் வாழ்வேனே.

'அன்பர்க், கெளியையாய் வருவாய் என்ப தென்னள வாயிற்றன்றே' என மகிழ்ந்து, 'என்னை இத்துணை தூரம் இழுத்து வந்த மானை வாழ்த்தவோ, உன்னைக் காண வைத்த மந்திரிகளை வாழ்த்தவோ, சொல்லுவதறியேன் வாழி' எனக்கூறி, மந்திரிமார்களை அழையுங்கள் எனச் சேவகர்களிடம் கட்டளை யிட்டான். மந்திரிமார்களும் வந்து அரசனைச் சேவித்து நின்றனர். அவர்களை நோக்கி அரசன் "உங்கள் சூழ்ச்சியால் அமைந்த இந்த வித்தில்லா முளையைப் பாருங்கள்" என்றான். அமைச்சர்களும்—

'எவ்வுருவில் யாரொருவர் இயைந்துள்கு வார்உளத்தில்
அவ்வுருவ தாய்த் தோன்றி அருள் கொடுக்கும்
புண்ணியனே'

என இறைவனை வாழ்த்திச் சய சய எனப் போற்றி வணங்கினர். "ஒரு மானைத் தொடர்ந்து சென்ற நம் வேந்தன், உள் அன்பின் வலை வளைத்துப் பெருமானைப் பிடித்தனனே" எனப் பேசி மகிழ்ந்தனர். பின்பு அரசன் தான் நினைத்தவாறே காடெறிந்து நாடாக்கிப் பெருமானுக்குத் திருக்கோயில் கட்டுவித்துத், தேவி திருவுருவம் தாபித்து, நித்திய நைமித்திய பூசை முதலிய ஏற்பாடுகள் பலவும் செய்து, தேவியையும் பெருமானையும் வாழ்த்தி மதுரை சேர்ந்தான். இறைவன் திரு அருளால் புத்திர பாக்கியமும் பெற்றான். பின்பு அப்பிள்ளைக்குப் பட்டம் கட்டி விட்டுத் தான் திரு ஆப்புடைய வள்ளலை நினைத்து உருகி, ஆப்பனூருக்கு வந்து, பெருமானை வணங்கிக்—

"காரணக் கடவுள் போற்றி கடல்வரும் ஆலகால
பாரணப் பரம போற்றி பராபர யோகி போற்றி
பூரணச் சுடரே போற்றி புண்ணிய புராண போற்றி
ஆரணப் பொருளே போற்றி ஆப்பனூர் உடையாய்
போற்றி"

எனப் பரவி நின்று அத்தலத்திலேயே வாசம் செய்து சிவனூர் திருவடி நீழலில் கலந்து விளங்கினன்.

உன்னை யல்லால் மற்றோர் உய்தி யுளதேயோ
என்னை யளிக்கும் எழிற்பிழம்பே நீவாழி.

[தான தனதனன தானந்தன]

" மேய வழுதியுயர் சோழாந்தகன்
வீடு மருவுகதை யீதாஞ் சொல்வோர்
நேய மொடுசெவியின் வாய்மாந்தினர்
நீடுபொருள் முழுதும் ஆராய்ந்துளோர்
தீய வினையொழிவர் மேலாம்புகழ்
சேர்வர் குறைதவிர வேவாழ்ந்துநீள்
ஆயு ளிறுதியினில் நாலாம்பதம்
ஆவ தடைவர்அரு ளேகூர்ந்தரோ.

திருப்புகழ்

விநாயகர் துதி

(குகஸ்ரீ)

உம்பர்தருத் தேனுமணிக் கசிவாகி
ஒண்கடலில் தேனமுதத் துணர்வூறி;
இன்பரசத் தேபருகிப் பலகாலும்
என்றனுயிர்க் காதரவுற் றருள்வாயே;
தம்பிதனக் காகவனத் தணைவோனே!
தந்தைவலத் தாலருள்கைக் கனியோனே!
அன்பர்தமக் கானநிலைப் பொருளோனே!
ஐந்துகரத் தானைமுகப் பெருமானே!

(பதவுரை.) தம்பி தனக்கு ஆக - (முதன்மைத்) தம்பியான முருகனுக்காக; வனத்து அணைவோனே - வனத்தில் (யானையாகி) வந்தவரே; வலத்தால் - வலம் வந்த காரணத்தால்; தந்தை அருள் - தந்தையான சிவம் தந்த; கைக் கனியோனே - கனியை (என்றும்) திருக்கரத்திற் கொண்டவரே; அன்பர் தமக்கு ஆன - அன்பர்கட்கு (உரியது) ஆன; நிலைப் பொருளோனே - பதிப் பொருளாயிருப்பவரே; ஐந்து கரத்து - ஐந்து கரங்களை யுடைய; ஆனைமுக -

---

சோதித்தல்ஏற்குமதோதொண்டருளத்தோங்குமொரு
சோதிசிவ சைலேசா சொரூபானந் தச்சுடரே.

யானை முகம் கொண்டவரே; பெருமாளே - (எங்கும் நிறை) பெரிய பொருளே!

உம்பர் தரு - தேவலோக கற்பகம் போல்; தேநு - காமதேநுவைப் போல்; மணி - சிந்தாமணியைப் போல்; கசிவு ஆகி - (உள்ளத்தில் மேன் மேலும்) இரக்கம் உண்டாகி;

ஒண் கடலில் - ஒளியுடைய நன்னீர்க் கடல் போல்; தேன் - தேன் கடல் போல்; அமுதத்து - பாற்கடல் போல்; உணர்வு ஊறி - உணர்வு (மென்மேலும்) ஊற்றெடுத்து;

இன்ப ரசத்தே பருகி - (வடிகட்டிய) இன்ப உயிர்ப்பையே வாய் மடுத்து; பல காலும் - எப்பொழுதும்; என்றன் உயிர்க்கு - எளியேனுடைய பிராணனுக்கு; ஆதரவு உற்று அருள்வாயே - (ஏழாம் சுவையான) அன்பு மிகுந்து அருள் பாலிப்பீராக, (எ - று).

சித்தைவிட்டுப் பிரியாத இன்பம், சத்தின் பூரிப்பாய்ச் சார்பொழுது, அச் சொரூபத்தைக் கணபதி என்று யோகிகள் காண்கிறார்கள்.

சத்தை விட்டு அகலாத ஆநந்தம், சித்தின் பூரிப்பாய்ச் சிறந்தெழும் நிலையில், அவ்வடிவை, விமல சுப்ரமண்யம் என்று விளம்புகின்றார் ஞானிகள்.

இவ்வரிசையில் கணபதியைத் தமயன் எனவும், முருகனைத் தம்பியெனவும் உரைப்பது, முதல் நூல்களில் உள்ள முறை. சதுர்த்தப் பொருளின் திருவிளையாடல், இயம்ப முடியா நிலையில், எப்படி எப்படியோ இருக்கிறது. அம்மூர்த்தங்களை, சிறக்கக் கோயில்களில் சேவிக்கும் பொழுது, புறமனம் கொண்டு நோக்கினால், சிற்பியின் கைத்திறம் சிறக்கத் தோன்றும். உள் மனம் கொண்டு ஊன்றி உணர்ந்தால், உருகுகிறது நம் உள்ளம்.

கதை ஒன்று; கதையில் உள்ள கருத்தைக் கவரும் கருத்து வேறு. இதோ வருகிறது ஒரு வரலாறு.

வள்ளியாரை மணக்கத் தடை வாராதபடி, முன்னே வருவாய் முதல்வா என்றாராம் முருகவேள். மறிகடல்

பட்டம் படிப்புப் பதவி முதலியன
கட்டம் வருங்கால் கைவிடும், நீ காப்பாயே.

போல் முழங்கி, வந்தேன் என்று யானையாகி வந்தாராம் கணபதி. சாதாரண யானையா அது? உலக முழுதுமான ஒரு பெரு வடிவம். கண்ட வள்ளியார் கலங்கினர்.

'இவ்வேழம் காத்தருள்க! எந்தைநீர் சொற்படி
செய்வேனென் றுருபால் சேர்ந்துதழீஇக் கொண்டனளே'

என்று முருகனை நோக்கி, பிரார்த்தித்தார் வள்ளிப் பிராட்டியார். இதன் பொருள் யாது?

கிரியா சக்தியை மணந்த முருகன், இனி இச்சா சக்தியையும் மணக்க வேண்டும். என்போல் குமரன் இருக்க வேண்டும். அப்பொழுதுதான், உயிர்கட்கு முழு அருள் பாலிக்க முடியும் என்று எண்ணுகிறார், சித்தி புத்திகளை மணந்த செல்வக் கணபதி. அதற்கென்றே ஊங்காரம் செய்து வருகிறார் இந்த ஓங்காரர். எனவே, வாரும் என்று அழைத்ததற்காக வந்தார். இரு சக்திகளுடன், முருகன் தன்போல் இருக்க வேண்டும் என்று எண்ணும் தம் எண்ணப்படியும் வந்தார். 'அறக் கருணை மறக் கருணையெனும் இரு மதமுடைய தம்மை, மும்மதன் என்று உரைக்கின்றது உலகம். உரைப்பார் உரையின்படி, மும்மத மூர்த்தம் ஒன்று கொள்வம் என்று கருதிய அவர் கருத்தின்படியும் வந்துளர். ஆதலின், முழு யானை வடிவொடு வந்துள நீர், கருதும் எண்ணத்தைக் காப்பாற்றுகிறேன் என்று, நீடிய அவர் நினைவை முதலில் நிறைவேற்றும். எம்பெருமா! நீர் சொல்கிறபடியே அடியேன் செய்கிறேன் என்று, கசிந்த மனத்தொடு வார்த்தை உரைத்து, தற்பர முருகனைத் தழுவினர் வள்ளியார் என்பது இதன் உள்ளுறை.

இப் பொருள், **தம்பி தனக்காக வனத்து அணை வோனே** எனும் அடியை ஊன்றி நோக்கினும் உருவாகிறது அல்லவா!

இரு தேவியர் என்பதை, மானுட மதிகொண்டு மதிப்பது ஆகாது. கணபதி இருபுறம் சித்தி புத்திகள்; கந்தன் இருபுறம் இச்சை கிரியைகள். தேவியர் என்பது திருவருள்

**நற்செல்வம் நல்லெண்ணம் நல்தவமும் தானுதவும்
மற்றென்றும் தொடர்ந்து வாராளென் றோர்ந்தேனே.**

நுட்பம். வனத்து அணைவோன்-காடு முழுதும் அடர்ந்து வந்த கட்டழகுக் களிறு எனினுமாம். இவ் வரலாற்றை உணர்கிற போதே உள்ளம் கசிவு கொள்கிறதே.

தந்தையை வலம் வந்தார். அவர் களிப்பொடு உதவிய கனியை என்றும் கரத்தில் கொண்டார் கணபதி. ஒரு நொடியில் உலகை வந்த முருகனை, ஞானப் பழம் என்று உயிர்கள் உணர உணர்த்தினர் உமை மணாளர்.

முருகன் பெயர் முன்னாக, பின்னாகத் தன் பெயரைப் பிணைத்து, சுப்ரமண்ய விநாயகர் என்று, கணபதி பழனியில் காட்சி தருகிறார்.

அடிவாரத்தில் ஒரு ஞானக் கனி; அது கணபதி கரத்தில் இருக்கிறது; பழனி உச்சியில் ஒரு ஞானப்பழம். அது, தன்னைச் சேவிப்பார்க்கு என்றும் இன்பம் தருகிறது என்று உணர்ந்து நெகிழ்ந்து ஓதுகின்றார் மேலோர். இந் நுட்பம் உணராமல், வெற்றி எவர்பால்; தோல்வி எவர்பால் என்று இவ் வரலாற்றில் சதுரங்கம் ஆடுவது சரியன்று.

தந்தை வலத்தால் அருள்கைக் கனியோனே என்பதை ஓதிப் பாருங்கள்! **ஊறிய உணர்வால்** வாயில் உமிழ் நீர் சுரக்கிறதா இல்லையா! ஆம். அப்படி அனுபவிப்பது தான் ஆநந்தம்.

பார்க்கும் நாங்கள் பசுக்கள்; பார்க்கப் படுபொருள் உலகம்; உணரப் படுபொருள் ஓங்காரர். தோன்றும் உலகம், என்றும் தோற்றக் கேடுகள் உடையது. நிலையா உலகில் நிலையானவராய், பொருளாய்க் கணபதி உணர்வில் பொருந்துகிறார். இங்ஙனம் கூறி இரு கரம் கூப்பி இறைஞ்சுகின்றார் அன்பர்கள். அவர்கள் கண்முன், நிலையான மூர்த்தமாகி நிற்கின்றார் பெருமான்; இது தடத்த நிலை; தமக்கே உரியது சொருப நிலை. இங்ஙனம் அன்பர்க்கான நிலை; தமக்கே ஆன தனிநிலை என இரு நிலையும் உடையவர் எம்பெருமான் என்றறிந்து,

---

சிவகிரிவாழ் தேசிகனே சித்தாசத் தாநந்தா
சிவநெறியில் என்னைச் சேர்க்கும்நாள் எந்நாளோ.

அன்பர் தமக்கு ஆன நிலைப்பொருளோனே என்று விளிக்கப் பெறுகிறார் அவ்விமலர். இவைகளை எண்ணும்போதே, இன்பமாக மூச்சு எழுகிறது; அவைகளை அவர்க்கே அர்ப்பணிக்கிறது ஆன்மா.

கொழுக்கட்டை உருவான உலகைக் கரத்தில் பற்றிக் காப்பவர்; ஒடித்த தந்தம் ஒன்றைக் கொண்டு, அசுர உணர்வினர்க்கு என்றும் அச்சம் தருபவர்; கமண்டலம் ஏந்தி, பரம தாய் தந்தையர்தம் பாத பூசை செய்பவர்; பரிபாகம் எய்திய ஆன்மாக்களை மேலும் பற்ற வரும் ஆணவ யானையை, பந்திக்கும் கயிறு ஒன்றைப் பற்றியவர்; மேலும் அதை அடர்த்து அடக்கும் அங்குசம் ஒன்றும் பிடித்துளர் என்று, அவருடைய ஐந்து திருக்கரங்களை அறிந்து மகிழ்கின்றார் அறிவுடையோர்.

சராசரம் எல்லாம் சார்ந்தவர்; எந்தக் கணத்திற்கும் இறைவர்; பெரிய தோற்றத்தர்; பெருமையை ஆள்பவரான அவரை, பெருமாளே என்று உணர்ந்து கூவுகிறது உள்ளம். ஐங்கரத்தால் அரும் செயலாற்றும் அவர், ஆன்ம விஷயத்தில் அன்பு காட்டுவார்; அருளும் புரிவார் எனும் நம்பிக்கை,

ஐந்து கரத்து ஆனைமுகப் பெருமாளே என்று வீறிட்டு அவரை விளிக்கத் தூண்டுகின்றது.

வேண்டுகை

இப்பிறப்பில் ஈகை வளர்த்தவர், மறுமையில் விண்ணாட்டுக் கற்பகமாகி விளங்குவர்.

வந்த விருந்தை மகிழ்ந்து ஏற்று, வருவிருந்தை எதிர் நோக்கும் வாய்மை மாதர், அடுத்த பிறப்பில் காமதேனு ஆகிறார்கள்.

பொன்னும் மணியும் பொலிய உதவினோர், சிந்தாமணியாகிச் சிறக்கின்றார்.

வாராரா? எண்ணி மனத்தால் ஏதேனும் கேளாரா என்று, கற்பகமும் சிந்தாமணியும் என்றும் எண்ணியிருக்

உன்னடியை என்றும்யான் உவந்து புகழ்ந்திடவே
இன்னருளைச் செய்திநீ யேரகம்வாழ் எம்மானே.

குமாம். அப்படியே காமதேனு, விருந்து நடத்த, வாி வா என்று, அருந்தவ முனிவர் எவரேனும் அழைக்க மாட்டாரா என்று, எத்திசையும் எதிர் நோக்கி யிருக்குமாம்.

இவ்வுலகில் வாழ்பவர் இதயம் ஈகை மயமாகி இருக்குமேல், புண்ணியம் மிக்க அவர்கள் கொடை என்னும் வளர, பொன்னுட்டில் இருக்கும் இவைகள், அருவமாகி வந்து அவர் தம் பொக்கிஷத்தை நிரப்புமாம். திரௌபதி யிடத்தும், மணிமேகலை யிடத்தும், ஆபுத்திரன் இடத்தும் இருந்த அட்சய பாத்திரத்தில், எடுக்க எடுக்கக் குறையாதபடி சோற்றை நிரப்பிக் கொண்டே யிருந்தது காமதேநு; மேலும், மதுரையில் உலவாக் கோட்டை உதவியது. குண்டை யூரில் நெல் மழை பெய்வித்தது; இவைகள் எல்லாம் அவைகளின் செயல்கள். இப்படியே வரலாறுகள் பல. இது சுருதி உரைக்கும் செய்தி. பாற்கடலில் பிறந்த கற்பகமாதிய வேறு; இவைகள் வேறு. இரக்கம் மிகுந்து இப்படி உதவ, எண்ணிறந்து இவைகள் விண்ணில் இருக்கின்றன.

இவைகளைப் போல், எனக்கு எளியார்பால் மிகவும் இரக்கம் பிறக்க வேண்டும் என்பார்,

உம்பர் தரு தேநு மணிக் கசிவாகி என்றார்: போல எனும் உவம உருபுகள் தொக்கன.

இரக்கம் பெருகப் பெருக, கடல்போல் ஊறி யெழும் உணர்வை அருள் என்பார்,

ஒண் கடலில் தேனமுதத்து உணர்வூறி என்றார்; தெளிந்த நீர்போல், தித்திக்கும் தேன்போல், மரணம் தவிர்க்கும் அமுதுபோல் சுரக்கும் உணர்வு என்பது, நியதியான இன்பச் சுரப்பை நினைவூட்டுகின்றது;

ஊறிய உணர்வால் உண்டான உயிர்ப்பு, இன்ப ரசமாக இருக்கும். அதைப் பலகாலம் விழுங்கி மகிழ்வான்

ஆறெழுத்தை ஓதும் அடியவர் தம் வல்வினையை
நீறுபடச் செய்யும் நின்மலநீ வாழியரோ.

விமலன். ஆ! என்ன இன்பமான அநுபவம்! அது கண்டு உமிழ் நீர் சுரந்து உவகை யடையும் உயிர் என்பர். இந்த அனுபவத்தை.

இன்பரசத்தே பருகிப் பலகாலும் என்றார். இதுவே நிவேதன நிலை. யானாகிய என்னை விழுங்கும் அத்தனி நிலையில், அடியேன் உயிர் விஷயத்தில் அன்பு வை! அருள் செய் என்பார், என்றன் உயிர்க்கு ஆதரவு உற்று அருள்வாயே என்றார். "என்னுளே உயிர்ப்பாய்ப் புறம் போந்து புக்கு, என்னுளே நிற்கும் இன்னம்பர் ஈசனே" எனும் அப்பரை இங்கு எண்ணுக.

உன் இரக்கம் என் இரக்கம் ஆக, நின் கனிவு என்னில் நேர, அன்பர்க்கு நீ அருள்வதுபோல், இன்பரசத்தை எண்ணிப் பருகி, பிரமம் எனும் பெரிய பொருளான நீ, அடியேன் உயிரை ஆதரித்தருள் என்று கொண்டு கூட்டிப் பொருள்கோடல் முறை. கசிவு - ஜீவகாருண்யம்; ஊறல் பக்திநிலை; பருகல் - பாசவைராக்கியப் பயன்; உயிர்க்கு ஆதரவு - பிரமஞானம் என்பாருமுளர்.

நாணமும் நகையும்

(அன்பன்)

சூதனாய்க் கள்ளன் ஆனேன். தூர்த்தரோடு இசைந்தேன். ஆசை வலையில் அகப்பட்டேன். அதில் அழுந்தாதே! இப்படிவா என்று ஈர்த்தாய்! என் மனத்தில் புகுந்தாய்! இதயத்தில் எப்போதும் இருக்கின்றாய்.

'கள்ளார் துழாயும் கணஅலரும் கூவிளையும்
முள்ளார் முளரியும் ஆம்பலும்முன் கண்டக்கால்
புள்ளாய் ஓர்ஏனமுமாய்ப் புக்கிடந்தான் பொன்னடிக்கென்று
உள்ளாதார் உள்ளத்தை உள்ளமாக் கொள்ளோமே'

என்றார் திருமங்கை மன்னர்.

உண்மைப் பொருளை உணர்த்தி எளியேனை
நன்மை பெறஅருடி மயிலேறும் நாயகமே.

எங்கும் மலர்கள் இருக்கின்றன. பறிக்கலாம். ஐந்து காலத்தும் உம்மை அர்ச்சிக்கலாம். இது ஆக்கையால் ஆன பணி. அது முடியாதா! தூய நான்கு வார்த்தைகளால் உம்மைத் துதிக்கலாம். இது வாக்கால் ஆவது. அதுகூட இயலாதா! காதலித்த உள்ளத்தன்பால் கலந்து வாழலாம். என்னே பாவம்! ஒன்றுமே செய்திலேன்!

"பேர்தெலாம் போது கொண்டுன் பொன்னடி புனைய மாட்டேன்
தீதிலா மொழிகள் கொண்டுன் திருக்குணம் செப்ப மாட்டேன்
காதலால் நெஞ்சமன்பு கலந்திலேன்; அதுதன்னாலே
ஏதிலேன் அரங்கற்கு எல்லே என் செய்வான் தோன்றினேனே!"

எங்கே இருக்கின்றானோ என்று அடியேன் ஏங்காதபடி, தேடி எங்கும் ஓடாதபடி, எம்பெருமானே! என் இதயத்தில் நீ என்றும் இருக்கின்றாய். உன்னைச் சிந்திக்கும் உணர்வு இல்லாமல், கரந்து வாழும் கள்ளன் அடியேன், தொண்டர் கோலத்தில் தோன்றினேன். போலி நாடகம் ஆடினேன்.

இன்ப வடிவான இறைவன், நம் உள்ளத்தில் இருக்கின்றானே! நெஞ்சத்தில் இருப்பவன், அநியாய நம் நினைவுகளை அறியானோ? என்று, இன்றுதான் அதை அழுந்த எண்ணுகிறேன். எண்ணி எண்ணி நாணுகிறேன். கடல் நிற வண்ணன் கண்ணை மறைத்து, யார்தான் என்ன செய்ய முடியும்? என் பேதமை இப்படியா இருக்கும்? எண்ணுகிற போதே, அளவிற்கு மீறி வளரும் சிரிப்பு வருகிறதே!

'உள்ளத்தே உறையும் மாலை உள்ளுவான், உணர்வொன்றில்லாக்
கள்ளத்தேன் நானும் தொண்டாய்த் தொண்டுக்கே கோலம் பூண்டு
உள்ளுவார் உள்ளிற் றெல்லாம் உடனிருந் தறிதி யென்றே
வெள்கிப்போய், என்னுள்ளே நான் விலவறச் சிரித்திட்டேனே'

என்று பெருத்த குரலெடுத்து விழுந்து விழுந்து சிரிக்கிறார் ஆழ்வார். பாருங்கள் ஊன்றி அவர் பாடுவதை! இதே கருத்துடன்,

'கள்ளனேன் கள்ளத்தொண்டாய்க் காலத்தைக்கழித்துப்போக்கித்
தெள்ளியேன் ஆகி நின்று தேடினேன் நாடிக் கண்டேன்
உள்குவார் உள்கிற் றெல்லாம் உடனிருந் தறிதி என்று
வெள்கினேன் வெள்கி நானும் விலவறச் சிரித்திட்டேனே'

என்று அப்பர் ஸ்வாமிகள் பாடும் பாடலை அறியாதார் யார்? வேடதாரிகள் செய்திகளைத் தமது அனுபவம் போல் கூறினால், எவரும் தம்மை இகழார்கள் என்று

தொண்டரடிப் பொடியும் அப்பரும் இப்படிப் பாடும் ஒரு நடையைக் கையாள்வதை இப்பாடல்களில் பார்க்கிறோம். இருவர் வாக்கிலும், சொல்லும் பொருளும்கூட ஒத்திருக்கும் இதுவும் ஒரு அதிசயமாக இருக்கிறது அல்லவா!

குற்றமான தம் மன நிலையைப் போலிப் பக்தர்கள் புரிந்து கொண்டால், நாணி நகைத்து நல்வழி திரும்புவர். இல்லையானால், இவர்களைப் பார்த்து நாணி நகைக்க நம்பன் இருக்கிறான்.

'நெக்கு நெக்கு நினைபவர் தம்முளே
புக்கு நிற்கும் பொன்னார்சடைப் புண்ணியன்
பொக்கம் மிக்கவர் பூவும் நீரும் கண்டு
நக்கு நிற்பன் அவர்தமை நாணியே'

என்று அப்பர் இதையும் நமக்கு அறிவித்து வைக்கிறார். இவைகளை ஓதியும் தெளிவு உதிக்கவில்லையானால், ஸ்ரீ கோதண்டபாணியின் மறக்கருணைதான் அவர்களை வழிப் படுத்த வேண்டும்.

பெரிய புராணச் சித்திர விளக்கம் 25.

காரைக்காலம்மையார்

(கி. வா. ஜ.)

வணிகர் குலத்தினர் பெருகி வளம் பெறும் கடற்கரைப் பட்டினம் காரைக்கால். அங்கே பெரிய வணிகர் தனதத்தர். அவருக்குப் பெண்ணாகப் பிறந்தவர் புனிதவதியார். இளம் பருவத்திலேயே சிவபெருமானிடம் ஆழ்ந்த அன்புடையவரானார் அப் பெருமாட்டியார். விளையாடும்பொழுதுகூடச் சிவபெருமானைப் பற்றிய பாடல்களைப் பாடி விளையாடுவார்.

புனிதவதியார் திருமணப் பருவத்தை அடைந்தார். நாகப் பட்டினத்தில் இருந்த பரமதத்தன் என்ற வணிக குலக் குமரன் அவரை மணம் செய்து கொண்டார். புனிதவதியார் அந்தக் குடும்பத்திற்கு ஒரே பெண்ணாதலின் அவரைப் பிரிந்திருக்க அவருடைய தாய் தந்தையர் விரும்பவில்லை. அதனால் தம்முடைய மருமகனைக் காரைக்காலிலே இருந்து விடும்படி வேண்டினார்கள். பரமதத்தன் அவர்கள் விருப்பியபடியே அவ்வூரில் தங்கி அவர்களுடைய சொந்தப் பிள்ளையைப்போல வியாபாரம் முதலியவற்றைக் கவனித்து வரத் தலைப்பட்டான்.

இல்வாழ்விற் புகுந்த புனிதவதியார் சிவபெருமானிடம் ஆராத அன்புடையவராக இருந்ததோடு இல்வாழ்க்கைக் குரிய கடமைகளையும் குறைவற நிறைவேற்றி யாரேனும் சிவனடியார் வந்தால் அவருக்கு உணவளித்து ஆடை அணி களும் பிற பண்டங்களும் அளித்து வழிபடுவார்.

அவர்களுடைய இல்வாழ்க்கை இனிதே நடந்து கொண் டிருந்தபோது ஒரு நாள் பரமதத்தனிடம் அன்புள்ளவர் இரண்டு மாங்கனிகளை அவரிடம் கொண்டு வந்து கொடுத் தார். அவற்றை வாங்கித் தன் வீட்டுக்கு அனுப்பி வைத் தான் அவன். அந்த இரண்டு கனிகளையும் புனிதவதியார் வாங்கி வைத்துக் கொண்டார்.

அப்போது ஒரு சிவனடியார் மிகவும் பசியுடன் அங்கே வந்து சேர்ந்தார். மிக்க வாட்டத்துடன் இருக்கும் அவர் பசியை உடனே ஆற்ற வேண்டும் என்று எண்ணினார் புனிதவதியார். ஆனால் அப்போது அன்னம் மாத்திரம் சித்த மாக இருந்தது; கறியமுது முதலியவை ஆகவில்லை. இருப் பினும் அடியவருடைய பசியை அறிந்து உடனே இலையைப் போட்டு உணவு பரிமாறத் தொடங்கினார். தம் கணவன் அனுப்பியிருந்த மாம்பழங்களில் ஒன்றை வெஞ்சனமாக இட்டார். அடியார் வயிறார உண்டு அம்மையாரை வாழ்த்தி விட்டுச் சென்றார்.

நண்பகலில் வழக்கம்போல் கடையிலிருந்து பரமதத் தன் வீட்டுக்கு வந்தான். நீராடி விட்டு உண்ண உட்கார்ந் தான். இலையில் எல்லாம் படைத்து விட்டு அவன் அனுப் பிய மாம்பழங்களில் எஞ்சியிருந்த ஒன்றை இட்டார். அந் தக் கனியை உண்ட வணிகன் அது மிகவும் சுவையுள்ள தாக இருப்பதை அறிந்து, "எங்கே, மற்றொரு பழம் இருக் கிறதே; அதையும் கொண்டு வந்து வை" என்றான்.

அம்மையார் அதை எடுத்து வருவதற்காகச் செல்பவ ரைப்போல உள்ளே போனார். உள்ளே பழம் ஏது? "இவர் ஆசைப்பட்டுக் கேட்கிறாரே! நான் என் செய்வேன்!" என்று அப்போது புனிதவதியாருடைய உள்ளம் தத்தளித் தது. அவருடைய நிலை கண்டு இரங்கினான் சிவபெருமான். அவனருளால் ஒரு மாங்கனி அம்மையாருடைய கையில் வந் திருந்தது. "இறைவன் திருவருள் இருந்தபடி என்ன ஆச்சரி யம்!" என்று எண்ணிய அம்மையார் அதைக் கொண்டு போய்த் தம் கணவனுடைய இலையில் பரிமாறினார்.

அதைப் பரமதத்தன் உண்டான். அது எங்கும் காணாத இனிய சுவையை உடையதாக இருந்தது. அது வரையில் அவன் உண்ட மாம்பழங்களுக்கு இல்லாத தனிச் சுவையை அதில் கண்டான். "முன்னால் நான் உண்ட பழத்தைப் போல இது இல்லையே! இது ஏதோ உயர்ந்த ராசி போல இருக்கிறதே! இதை யார் கொடுத்தார்கள்?" என்று கேட்டான்.

இறைவன் அருளால் கிடைத்தது என்று சொல்ல அம்மையார் விரும்பவில்லை. அந்த அற்புதம் இரகசியமாகவே இருக்கட்டும் என்பது அவர் எண்ணம். ஆனால் கணவன் கேட்டதற்கு உண்மையைச் சொல்வதுதான் கற்பு நெறிக்கு அழகு என்றும் ஓர்ந்தார். சிறிது நேரம் அவர் தடுமாறினார். பிறகு நடந்ததை நடந்தபடியே சொல்வதுதான் தக்கதென்று முடிவு செய்து எல்லாவற்றையும் பரமதத்தனிடம் உரைத்தார்.

'இறைவன் அருளால் மாம்பழம் கிடைப்பதாவது! உலகத்தில் நடக்கிற காரியமா இது?' என்று மயங்கியவன், பிறகு, "அப்படியானால் அவனருளால் மற்றொரு பழத்தை வருவித்து இடு" என்றான்.

அம்மையார் என்செய்வார்! உள்ளே சென்று, "இறைவனே, இவருடைய விருப்பத்தை இப்போது நிறைவேற்றாவிட்டால் நான் சொன்னது பொய்யாகிவிடுமே!" என்று மனம் நைந்து வேண்டினார். இப்போதும் இறைவன் அருளால் அவர் கையில் மாங்கனி ஒன்று வர அதைக் கொணர்ந்து தம் கணவன் கையில் தந்தார். பரம தத்தன் மிக்க வியப்பை அடைந்து அதை வாங்கிக்கொண்டான். ஆனால் அது உடனே கையிலிருந்து மறைந்தது. கைக்கு எட்டியது வாய்க்கு எட்டாமற்போகவே, அம்மையார் தெய்விகம் நிரம்பியவர் என்ற உண்மை அவனுக்குப் புலனாயிற்று. 'இவள் மற்றப் பெண்களைப் போன்றவள் அல்ல; தொழுவதற்குரியவள்' என்ற மதிப்பும், அவரோடு வாழ்வதற்குப் பயமும், இன்ன செய்வதென்று தெரியாத தடுமாற்றமும் உண்டாயின. 'இனி இவளோடு வாழ இயலாது' என்று தீர்மானித்துக்கொண்டான். அதுமுதல் அதிக நெருக்கமின்றி வாழலானான்.

எப்படியும் அவ்விடத்தைவிட்டு நீங்கவேண்டும் என்று முடிவு செய்தானாதலால் அதற்கு என்ன வழியென்று

ஆராய்ந்தான். "இங்கே இருந்து வியாபாரம் செய்வதோடு, கடல் கடந்து சென்று வாணிகம் செய்ய விரும்புகிறேன். அதில் அதிக ஊதியம் உண்டு" என்று தன் உறவினர்களி டம் சொல்ல, அவர்கள் அவன் கூறுவது சரியென்று இணங்கி அவனுக்காக ஒரு கப்பலைக்கட்டித் தந்தனர். அதில் ஏறிக் கடல் கடந்து சென்று வேற்று நாட்டை அடைந்து அங்கே வாணிகம் செய்து செல்வம் சேர்த்தான். பின்பு மீட்டும் தாய்நாடு வர எண்ணிய அவன், காரைக்காலுக்குப் போகாமல் பாண்டிநாட்டில் ஒரு கடற் கரைப் பட்டினம் சென்று அங்கேயே தங்கி வாழலானான். அங்கே கப்பல் வியாபாரம் செய்யும் வணிகன் ஒருவனுடைய பெண்ணை மணந்துகொண்டு வாழ்ந்து வந்தான். தனக்கு முன்பே திருமணம் ஆயிற்றென்பதையும், அந்த மனைவி இன்னாள் என்பதையும் யாருக்கும் தெரிவிக்காமலே இருந் தான். அவனுக்கு இரண்டாம் மனைவியிடம் ஒரு பெண் பிறக்க, அவளுக்குப் புனிதவதி என்ற பெயரையே இட்டு அன்புடன் வளர்த்து வந்தான்.

காரைக்காலில் புனிதவதியார் தம் இல்லத்தில் அறங் கள் பிறழாமல் ஆற்றி வந்தார். நாளடைவில் பரமதத் தன் பாண்டிநாட்டில் ஒரு நகரத்தில் வாழ்கிறான் என்ற செய்தி உறவினர்களுக்குத் தெரிய அவர்கள் புனிதவதி யாரிடம் தெரிவித்தார்கள். தக்கவர்களை அனுப்பி அவ னுடைய நிலையைத் தெரிந்துகொண்டு வரச் செய்தார்கள். அவன் வேறு மணம் செய்துகொண்டு வாழ்வதை அறிந்த போது அவர்களுக்குக் கலக்கம் உண்டாயிற்று. 'அவன் இருக்குமிடத்தில் இவளைக் கொண்டுபோய் விடுவதே நம் கடமை' என்று எண்ணிய உறவினர், புனிதவதியாரை ஒரு சிவிகையில் ஏற்றி ஆண்களும் பெண்களும் சூழப் பரம தத்தன் இருந்த ஊருக்குச் சென்றார்கள். அங்கே சென்று தாம் வந்த செய்தியை ஆள் மூலம் பரமதத்தனுக்குச் சொல்லியனுப்பினர். அவன் அஞ்சித் தன் இரண்டாம் மனைவியோடும் குழந்தையோடும் சென்று எதிர்கொள்ள எண்ணிப் புறப்பட்டான். புனிதவதியார் இருந்த இடம் சென்று தன் இரண்டாம் மனைவியையும் குழந்தையையும் வணங்கச் செய்து, தானும் அவருடைய அடியில் வீழ்ந்து பணிந்து எழுந்து, "யான் உம்முடைய அருளால் இங்கே இனிமையாக வாழ்க்கை நடத்துகிறேன். இந்தக் குழந்

தைக்கு உம்முடைய திருநாமத்தையே வைத்திருக்கிறேன்'' என்று பணிவுடன் கூறி மீட்டும் வணங்கினன். அப்போது புனிதவதியார் அஞ்சி ஒருபுறமாக ஒதுங்கி நிற்கச் சுற்றத்தினர், "உன் மனைவியை நீ வணங்குகிருயே! இது முறையாகுமா?'' என்று கேட்டனர். அப்போது அவன், "இவரை மற்றப் பெண்களைப்போல மானிடப் பெண் என்று நினைக்காதீர்கள். இவர் தெய்வப் பிறவி. இதனை உணர்ந்த பிறகே இவரை மனைவியாகக் கொண்டு வாழ்தல் அபசாரம் என்று இவரை விட்டுப் போனேன். இவரிடம் உள்ள பக்தியினுல் இதோ இந்தக் குழந்தைக்கு இவருடைய பேரையே வைத்தேன். இவர் தெய்வத்தன்மை உடையவர் என்பதை அறிந்தவனுதலால் வணங்கினேன். நீங்களும் இவரை வணங்குங்கள்'' என்று சொன்னதைக் கேட்ட உறவினர் ஒன்றும் அறியாமல் மயங்கி நின்றனர்.

புனிதவதியார் பரமதத்தனுடைய கருத்தை உணர்ந்து கொண்டார். "இவர் எண்ணிய எண்ணம் இதுவானுல் இந்த உடம்பைத் தாங்குவதனுல் என்ன பயன்? இவருக்காக அமைந்த இந்த உடம்பு இனி எனக்கு வேண்டாம். சிவபெருமானே, இனி நின் தாள்களைப் போற்றும் பணியையன்றிப் பிறிதொரு பணி இல்லை. ஆதலின் அடியாளுக்குப் பேய்வடிவை அருள்செய்ய வேண்டும்'' என்று இறைவனைத் துதித்து நின்ருர். அவர் வேண்டுகோளின்படி, கண்டார் விரும்பும் கனியை முன்பு அருள்செய்த அப்பன், இப்போது அவர் விருப்பத்தின்படியே, கண்டார் அஞ்சி ஒதுங்கும் பேய் வடிவத்தைத் தந்தருளினுன். புனிதவதியாருடைய உடம்பில் இருந்த தசைகள் மறைந்தன. எலும்புருவம் பூண்ட பேயாக நின்ருர். தேவர்களும் போற்றும் பேயாக உருவெடுத்ததைக் கண்ட உறவினரும் பரமதத்தனும் வணங்கி, அஞ்சித் தத்தம் இடங்களை அடைந்தார்கள்.

புதிய உடம்பு பெற்ற அம்மையார், இறைவனைப் போற்றி, அற்புதத் திருவந்தாதி, திருவிரட்டைமணிமாலை என்ற இரண்டையும் பாடினுர். பின்பு கைலைமலை சென்று உமாதேவியாருடன் எழுந்தருளியிருக்கும் பரமசிவனைத் தரிசிக்க வேண்டும் என்ற ஆசை உந்த, வடதிசை நோக்கிப் புறப்பட்டார். அவருடைய உருவத்தைக் கண்டவர்களெல்லாம் அஞ்சி ஓடினுர்கள். "பேய், பேய்!'' என்று கூவி ஓடி-

னார்கள். "எம்பெருமானுக்கு என்னை அடையாளம் தெரிந்தால் போதும். மற்றவர்களுக்கு நான் எப்படி இருந்தால் என்ன?" என்று எண்ணி அவர் கைலையை நோக்கிப் போய்க்கொண்டிருந்தார். தமிழ்நாட்டைக் கடந்து, அப்பால் வடநாட்டையும் கடந்து கைலை மலையின் பக்கம் அணுகினார். அங்கே தம் காலால் நடப்பதை விட்டுவிட்டுத் தலையினால் நடக்கத் தொடங்கினார். கைலைமால்வரையில் என்புருவம் படைத்த காரைக்காலம்மையார் தலையினால் நடந்து ஏறுவதை மேலே எம்பெருமானுடன் வீற்றிருந்த உமாதேவியார் கண்டார். உடனே சிவபிரானை நோக்கி, "இதோ இந்த என்புருவம் படைத்த உடம்பு தலையாலே நடந்து ஏறுகிறதே! இதற்கு உள்ள அன்புதான் என்னே!" என்று வியந்தபோது பெருமான் உமாதேவியாரிடம், "இங்கே வரும் பெண்மணி நம்முடைய அம்மை. இந்த என்புருவம் வேண்டுமென்று பிரார்த்தித்துப் பெற்றுக்கொண்டாள்" என்றார். அப்போது அருகில் காரைக்கால்பேயார் அணுகவும், "அம்மா!" என்று அழைத்தருளினான் எம்பெருமான்.

தமக்கு அம்மையே இல்லாதவரும், தாமே எவ்வுயிர்க்கும் அம்மையாக இருப்பவருமாகிய சிவபெருமான், "அம்மா!" என்று அருளியதைக் கேட்ட பேயார், "அப்பா!" என்று கூவியபடியே ஆர்வத்தோடு சென்று அவனுடைய திருவடித் தாமரையில் வீழ்ந்தார். வீழ்ந்து எழுந்த அவரை நோக்கி, "இப்போது உனக்கு என்ன வேண்டும்?" என்று எம்பெருமான் கேட்கவே மனம் உருகி அவர் சொல்லலானார். "இறைவனே, என்றும் இறவாத இன்ப அன்பு எனக்கு வேண்டும். இனி மீண்டும் இவ்வுலகில் பிறவாமல் இருக்கும்படி அருள்பாலிக்க வேண்டும். ஒருகால் பிறக்கும்படி நேர்ந்தாலும் உன்னை மறவாமல் இருக்க வேண்டும். அதோடு உன் புகழையே பாடி உன் திருவடிக்கீழ் என்றும் உறையும்படி திருவருள் புரிய வேண்டும்" என்று வணங்கி விண்ணப்பம் செய்துகொண்டார்.

இறைவன் அவ்வாறே அருளியதோடு, "தென்னாட்டில் பழையனூரைச் சார்ந்த திருவாலங்காட்டில் நாம் ஊர்த்துவ தாண்டவம் செய்கின்றோம். அந்தத் தாண்டவத்தைக் கண்டு இன்புற்று அங்கே இருந்து கொண்டு நம்மைப் பாடுவாயாக!" என்று திருவாய் மலர்ந்தருளினான்.

அதனைக் கேட்டு இறைவன் திருவருளை எண்ணி உருகி அவனை வணங்கி விடை கொண்ட பிறகு திருவாலங்காட்டை நோக்கிப் புறப்பட்டார். தலையாலே நடந்து வந்து அந்த நற்பதியை நண்ணினார்.

அங்கே அண்டமுற நிமிர்ந்தாடும் அப்பனுடைய ஆடலைக் கண்குளிரத் தரிசித்து இரண்டு திருப்பதிகங்கள் பாடினார். பேய்கள் சூழ எம்பெருமான் ஆடுந் திறத்தை அவற்றில் விரித்துரைத்தார். பேய்களின் இயல்பையும் எடுத்துச் சொன்னார். அந்தத் தாண்டவமூர்த்தியின் திருவடிக் கீழ் என்றும் உறையும் பேறு பெற்றார்.

"மடுத்தபுனல் வேணியினார் அம்மைஎன மதுரமொழி
கொடுத்தருளப் பெற்றாரைக் குலவியதாண் டவத்தில்அவர்
எடுத்தருளும் சேவடிக்கீழ் என்றும்இருக் கின்றாரை
அடுத்தபெருஞ் சீர்பரவல் ஆரளவா யினதம்மா!"

என்று சேக்கிழார் பாடுகிறார். அளப்பதற்கரிய பெருமை உடையவர் காரைக்காலம்மையார் என்பதில் ஐயம் ஏது?

Sri Nataraja at Tiruvalangadu

The form of Nataraja is a most inspiring concept. The unity of God head and the unity of creation are both basic. The advaitic idea of the fundamental unity of all that is, would appear to have taken shape in the Lord's form. The sun, the moon, the stars, the directions, the space eternal, the earth and all else have been integrated in one form. All that is and all that is not, all that is described as good, and all that is described as bad, the passing time, light, darkness have all been moved in the consistency of the holy conception of Sri Nataraja's dance. The capacity to instruct the most abstruse proposition- of religious philosophy in the cast of form and name has been peculiarly the gift of our ancient seers. The Chidambaram temple and the temple

of Tiruvalangadu may be said to be the chief centres of the worship of Sri Nataraja, amongst a host of other shrines. Nataraja's dance has a peculiar parallelism with Sri Krishna's dance on the Kalinga. The purified heart of man is the stage on which the everlasting dance of creation is set. Bhakti or an intense passion to reach the Lord and the absorbing desire to serve all life as the Lord's tabernacle alone can rid the heart of all its impurities. Vallalar was panting to discover and to serve those great saints, who regarded all lives as their own and established in themselves a university of love and service. The Sages, the Nayanmars, the Alwars and no less the Siddhars proclaim that all is God. The sublimation of all matter and differentiation into the unified spirit of love and service was thus indicated. A few days back at Tiruvalangadu on the Good Friday, was started a function-celebration of the Karaikal ammayar day. Thousands of devotees had gathered. The day was the celebration of the grand concept of Sri Nataraja and how the lady Saint of Karaikal Ammaiar obtained the beatific vision and attained realisation at Tiruvalangadu. It has been proposed to make it an annual function. I hope the devotees of Madras will bless the effort of Srimathi Shanbagavalli ammal to make it an annual spiritual gathering of all seekers after spirituality on the Good Friday of every year. May the Lord bless this venture. I feel sure the nearness of Tiruvalangadu to Madras and the Oordhwa Thandavam of Nataraja there will help to create another great day of spiritual assemblage in the Tamil world for every year.

—*Thiruppugal Mani*

நல்லவர் பெறுநல் செல்வமே! மன்றுள்
ஞானநா டகம்புரி நலமே!
வல்லவர் மதிக்கும் தெய்வமே! முல்லை
வாயில்வாழ் மாசிலா மணியே!
புல்லவன் எனினும் அடியனேன் ஐயா!
பொய்யல உலகநிந் தது;நீ
இல்லையென் றுளும் விடுவனோ! சும்மா
இருப்பதுன் திருவருட்(கு) இயல்போ!

1886
No. 1506 அசோகா MILD SCENTED ASOKA ஸ்ரீசீட் நெ. 1506

Coffee

Ours for Quality

RAW, ROAST OR GROUND

GANESH & CO., (MADRAS), LTD. MADRAS

நம்பிக்கைக்கும் நாணயத்திற்கும் உங்கள்
நன்மதிப்புப் பெற்ற நகை வியாபாரிகள்

சுவர்ண மாளிகை

A. S. S. M. சோமசுந்தரம் செட்டியார் & Co.

தங்கநகைகள், வெள்ளிப் பாத்திரங்கள் வியாபாரம்

124, தெற்காவணி மூலவீதி - மதுரை

Tel:—"FAITH" Estd:—1924. Phone:—113

அரிய தெய்வ அருள் நூல்கள்

குகஸ்ரீ. பு. பா. ரசபதி அவர்களின் அருமையான
விரிவுரையுடன்

ஸ்ரீ அருணகிரிநாதர் கந்தர் அநுபூதி	1	0	0
,, 6 திருவகுப்புகள்	1	8	0
ஸ்ரீ பகழிக் கூத்தர் திருச்செந்தூர்ப் பிள்ளைத் தமிழ்	2	0	0
ஸ்ரீ குமரகுருபரர் அருளிய கந்தர் கலிவெண்பா	2	0	0
ஸ்ரீ சேரமான் பெருமாள் திருக்கயிலாய ஞானவுலா	2	0	0
ஸ்ரீ ஔவையார் அருளிய விநாயகர் அகவல்	1	8	0
திருவெம்பாவை திருப்பாவை திருப்பள்ளி யெழுச்சிகள்	0	6	0
திருப்புகழ் மாலை (250 பாடல்கள் மட்டும்)	0	12	0
கந்தக் கதம்பம் (பாடல்கள்) பல பிள்ளைத் தமிழுடன்	1	0	0
தேவி தாஸர்கள் (அச்சில்)			
கணபதி பக்தர்கள் ,,			
முருகனடியார் ,,			

அமிர்தவசனி காரியாலயம் 54, பந்தர் தெரு, சென்னை-1

Printed by K. V. Jagannathan at the National Art Press
91, Mount Road, Madras—18
Edited & Published by S. Muthuswami, 54, Bunder St., Madras-1.